ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சமித்தி

# SRI RAMAKRISHNA SARADA SAMITI

## வெள்ளி விழா மலர்
## SILVER JUBILEE



சாரதா குடீர்

59, விவேகானந்தா வீதி, கொழும்பு - 6, ஸ்ரீ லங்கா.

230.6
ராமகி
SL/PR

## OUR PRESIDENTS


1. Mrs. Maheswary Mahadeva 1970 - 1975
2. Mrs. Pamathy Thanabalasundaram 1976
3. Mrs. Balan Lakshmana Iyer 1977 -1983
4. Miss Nahammal Kasipillai 1984 - 1995
5. Dr. (Mrs.) Vimala Krishnapillai 1995


**SRI RAMAKRISHNA SARADA SAMITI**

**SARADA KUTIR**

**59, VIVEKANANDA ROAD**

**COLOMBO - 06**





Ramakrishna Math
P. O. Belur Math, Dist. Howrah
West Bengal 711 202
Fax : 665-4346, 665-9581, 6665-5391, 64-1144, 64-1180

# Message

I am glad to know that the Ramakrishna Sarada Samiti, Colombo, will be celebrating its silver jubilee in July this year. A souvenir will be published to commemorate the event, it is learnt.

I pray to Sri Ramakrishna and the Holy Mother Sri Sarada Devi for their blessings to be showered on the samiti. I also convey my best wishes to everyone associated with the Samiti and wish the function as well as publication of souvenir all success.

**Swami Bhuteshananda**
*President*
*Ramakrishna Math & Ramakrishna Mission*
*23May 1995*




**RAMAKRISHNA MISSION**
**(CEYLON BRANCH)**
**40, RAMAKRISHNA ROAD**
Colombo -6
T.P : 588253


# வாழ்த்து மலர்

**ஜனனீம் சாரதாம் தேவீம் ராமக்ருஷ்ணம் ஜகத்ரும் !**
**பாதபத்மே தயோ:ச்ரித்வா ப்ரணமாமி முஹுர்முஹு: !!**

இந்து சமயம் பெண்ணின் பெருமையைப் போற்றி வணங்கும் சமயம். பொதுவாக மனித குலத்திற்கும், சிறப்பாக பெண் இனத்திற்கும் பெருமை சேர்த்த கற்புக்கரசிகளும், பெண்ணரசிகளும், பெண் அறிஞர்களும், ஞானிகளும், காலங்காலமாகத் தோன்றி இப்பூமியைப் புனிதமாக்கிய வரலாற்றை இந்து சமயத்தில் காண்கிறோம். ஆனால் கடந்த சில நூற்றாண்டுகளில் பெண்களின் பெருமை மறக்கப்பட்டு, பெண் சுதந்திரம் மறுக்கப்பட்டு, பாரதப் பண்பாடு வீழ்ச்சி கண்டு, மக்கள் இருண்ட காலத்தில் துவண்டு கொண்டிருந்தபொழுது, திரும்பவும் ஒரு தெய்வீக மாது தோன்றி மக்கள் வாழ்க்கையில் சிறப்பான மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தார். அவர்தான் தூய அன்னை சாரதாதேவி ஆவார். பெண்களையெல்லாம் அன்னை பராசக்தியின் வடிவமாகக் கண்ட பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஆன்மிகத் துணைவியாக அமைந்த அன்னை சாரதா தேவியாரின் வாழ்க்கை ஒரு சாதனை எனலாம். அமைதியாக, அடக்கமாக – பெண்கள் சாதிக்கமுடியாதது எதுவுமே இல்லை என்பதை வாழ்ந்து நிரூபித்துக் காட்டியவர் அவர். சிறந்த குடும்பத் தலைவியாக, உலக அன்னையாக, ஆன்மிகத் தலைவியாக, இன்னும் பல கோணங்களில் அவரது வாழ்க்கை மலர்ந்து, மனித குலத்திற்கு, குறிப்பாக பெண் இனத்திற்கு, ஒளியூட்டியுள்ளது. இது சரித்திர உண்மை. அவரது வாழ்வை மையமாகக் கொண்டு இன்று பல ஸ்தாபனங்கள் உலகின் பல பாகங்களில் பல்வேறு சமய, சமூகப் பணிகளை ஆற்றி வருகின்றன. அத்தகைய ஸ்தாபனங்களில் ஒன்றுதான் கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சமிதி. தியாகமும், சேவை உணர்வும் உடைய மகளிர் பலர் ஒன்றிணைந்து பல நல்ல காரியங்களை ஆற்றிவருவது உண்மையிலேயே ஒரு சிறந்த, பாராட்டத்தக்க விடயமாகும். இன்று வெள்ளி விழாவைக் கொண்டாடும் சமிதியினரின் புனிதப் பணிகள் மேன் மேலும் வளர்ந்து, மகளிர் வாழ்க்கைக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், அன்னை சாரதாமணி தேவி, சுவாமி விவேகானந்தரது அருள் இந்த சமிதியின் அங்கத்தினர்பால் என்றும் நிலைத்திடப் பிரார்த்திக்கிறோம்.

சாரதா சமிதியின் வெள்ளி விழா மலருக்கு எங்கள் மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சுவாமி ஆத்மகணாநந்தா

SRI SARADA MATH
DAKSHINESWAR, CALCUTTA - 700 076
Phones : 553-2566, 553-3411


# Message

I come to know that the Sri Ramakrishna Sarada Samiti, Colombo, Sri Lanka, is going to celebrate its Silver Jubilee this year, and that a souvenir will be published to commemorate the event. I sincerely wish the programme all success.

The Samiti has worked hard with perseverance and zeal for the cause to spread the ideals of Sri Ramakrishna, Sri Sarada Devi, the Holy Mother, and Swami Vivekananda. Sri Ramakrishna says that the purpose of human life is to attain divine love.

May the choicest blessings of the Holy Mother be ever on the Samiti and all its members is my heart felt prayer on this auspicious occasion.

**Pravrajika Mokshaprana**
*President*



**RAMAKRISHNA MATH**
**RAMAKRISHNA MATH MARG**
Domalguda
Hyderabad - 500029
T.P : 633936, 633937, 635545
25 - 8 -96

My dear V. Kanapathi Pillai

I received your letter of 17 th August with its enclosure yesterday through Mr. Thedchanamoorthy. I appreciate your work. You may remember that I have Spoken under the Society's auspices long ago. And, I hope your wish of having a branch of Sarada Math in Colombo will be fulfilled, sooner or later.

You have asked me for a message, and I am writing these few lines:

Your Society has done many spiritual, cultural and social service activities during the last few years of the Society's existence. This is the message Swami Vivekananda has given to us-- service without any distinction of caste, creed, or race. For, the same divine is present in the hearts of all, and service is also the best form of inter-human relations.

I am sending you herewith three books for your Society. I convey my love and blessings to all the workers of the Society and its members.

Yours affectionately,
**Swami Ranganathananda**
Vice- President
Ramakrishna Math and Ramakrishna Mission

(Miss) V. Kanapathi Pillai
Sri Ramakrishna Sarada Samiti
Sarada Kutir, Colombo -6

Encl:
1. The Call of Human Excellence
2. Women in the Modern Age
3. Education for Character Development and Nation Building

"They alone live who live for others"

- Swami Vivekananda



**SRI SARADA MATH**
7, RAGHAVIAH ROAD
Madras - 600 017
Phone : 8282437

# Message

I am happy to learn that a souvenir will be brought out to commemorate the Silver Jubilee Celebration of Sri Ramakrishna Sarada Samiti, Colombo which was started in 1970 with the guiding inspiration of our most revered and beloved general secretary, Pravrajika Muktiprana. She is no more with us, but her blessings and good wishes will always guide us in the right path.

May the blessings of Sri Ramakrishna, Holy Mother Sri Sarada Devi and Swami Vivekananda be showered on the 'Sarada Kutir' Colombo so that it grow stronger in spirituality, morality and culture. May many women come forward to be guided towards the noble path.

**(Pravrajika Nirbhayaprana)**
*President*
Sri Sarada Math, Madras

## "WHY SHOULD YOU FEAR WHEN I, YOUR MOTHER, AM WITH YOU"

-THE HOLY MOTHER

A very special delight it is to feel that the lamp we lighted on 9th March, 1970 is still aglow, with undiminished brightness. It is our earnest prayer that the Sri Ramakrishna Sarada Samiti will grow from strength to strength and face the challenge of time with confidence and success.

The late Revered Swami Prematmanandaji Maharaj has played an important role in the history of the Sri Ramakrishna Sarada Samiti. It was he who inspired and encouraged us to go ahead with the construction of the kutir, the Sri Ramakrishna Sarada Kutir. How he would visit the site whenever he had the time, to watch the progress of the building! How his eyes would linger long at the rising structure! Indeed, we are under a deep debt of gratitude to Swami Prematmanandaji Maharaj. A sensational vision that took shape and form is the Kutir a unique and happy home for girls.

We would like to take this opportunity to express our grateful thanks to the Revered Swamijis of the Sri Ramakrishna Mission. They, richly blessed with wisdom and foresight, are a strong and unfailing support to us.

The Holy Mother, Sri Sarada Devi, is indeed a very remarkable personality. In fact her life itself is a Saga of caring, praying and serving. She perceived the Divine everywhere and treated everyone and everything with respect. She has a special message for us.

"I tell you one thing; if you want peace, do not find fault with others. Rather see your own faults. Learn to make the World your own. No one is a stranger my child". The whole world is your own". What a wonderful message; what an effective formula for resolving the problems that baffle and bedevil society that appears to be swerving form its Dharmic Moorings.

The twenty-fifth anniversary is a land-mark in the history of any Society, and certainly it cannot be ignored. Well, we are happy to state that the Silver Jubilee Celebration of the Samiti is the result of the concerted effort of our friends, well-wishers and members who have given of their best in a grand way. Our special thanks to them.

May the Sri Ramakrishna Sarada Samiti continue with its service to humanity and be a blessing to everyone.

**Desabandhu Nahammal Kasipillai**
*President*
1984... 1995

**45,Vivekananda Road,**
**Colombo - 6**



**MESSAGE FROM THE PRESIDENT**
**SRI RAMAKRISHNA SARADA SAMITI.**

It is a pleasant duty and privilege for me, as the President of the Sri Ramakrishna Sarada Samiti to present this message to the Jubilee Souvenir. This Samiti was inaugurated on 9th March 1970 by Srimat Prematmanandaji, the then President of Sri Ramakrishna Mission Colombo. This Souvenir, though belated is being released to commemorate the Silver Jubilee of our Samiti.

On behalf of the Samiti, I thank all those who have contributed messages, articles and advertisements for the Souvenir. Our grateful thanks are also due to all members of this association and the well wishers who gave their support. It's our earnest prayer to Holy Mother Sarada Devi that, we should continue to be of greater service in the years to follow.

*Dr.(Mrs). Vimala Krishnapillai*

# 'ஓம்' எனும் மந்திரம்

**ஓம்! ஓம்!! ஓம்!!!** இந்த நாதத்தை எழுப்பும் போதே அந்த நாதத்திலேயே மனத்தை ஒரு முகமாகக் குவித்து நிறுத்துவது தியானத்துக்கு ஒரு வழி. "ஓம்" என்ற நாதம் நமது சமயத்தில் முக்கிய இடம் பெறுகிறது. இந்த "ஓம்" சேராத மந்திரமே இல்லை. இதுவே எல்லா மந்திரங்களுக்கும் மூல மந்திரமாகவும் இருக்கிறது. இத்தகைய மந்திரத்தின் பொருள் தான் என்ன? ஏன் இந்த "ஓம்" என்ற மந்திரத்தை நாம் உச்சரிக்க வேண்டும்? ஓங்காரத்துள் அடங்காதது ஒன்றுமே இல்லை. உமாபதி சிவமும் "இறைசக்தி பாசம் எழின் மாயை ஆவி, உறநிற்கும் ஓங்காரத்துள்" என்ற திருவருட் பயனின் பாடலில் சிவம், சக்தி ஆன்மா, திரோதான சக்தி, மலம் ஆகிய ஐந்தையும் அடக்கிய ஐந்தெழுத்தாகிய பஞ்சாக்ஷரம் ஓங்காரத்துள் பொருந்தி நிற்கும் என்றார்.

வாயைத் திறந்த மாத்திரத்தில் பிறக்கின்ற "அ"திறப்பதற்கும், மூடுவதற்கும் இடைப்பட்ட நிலையில் பிறக்கின்ற "உ" வாயை மூடுவதனால் உண்டாகிற "ம்" என்ற மூன்றெழுத்தும் சேர்வதனால் தோன்றும் "ஓம்" என்ற ஓங்காரம், தொடக்கம், நிகழ்வு, முடிவு ஆகிய அனைத்தையும் தன்னுள் அடக்கி அனைத்துமாய் உள்ள பிரம்மத்தின் ஒலியாக விளங்குகிறது. அண்டமெல்லாம் செறிந்துள்ள "ஓம்" என்ற ஓசையில் உள்ள "அ" சிவம் "உ" திருவருட் சக்தி, இவையிரண்டும் விரிவு ஆகும்" ம்" என்பது ஒடுக்கம் ஆகும். எனவே "ஓம்" என்பது சிவமும் சக்தியுமே என்ற கருத்தில் திருமூலரும்.

***ஆரும் அறியார் அகாரம் அவனென்று***
***பாரு முகாரம் பரந்திட்ட நாயகி***
***தாரம் இரண்டும் தரணி முழுதுமாய்***
***மாறியெழுந்திடும் ஓசையதாமே***
*என்று பாடுகிறார்.*

*மணிவாசகரும் சிவபுராணத்தில்,* **"மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன், உய்யவென் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா"** என்று கூறுமிடத்து தான் இறைவனின் திருமலரடிகளைக் கூடிப் பிழைக்கும் வண்ணம் தனதுள்ளத்தினுள்ளே "ஓம்" என்ற ஒலி வடிவாய் நின்ற உண்மைப் பொருளே என்று பரம்பொருளை நினைந்து உருகுகிறார். இதனாலும் இறைவனே ஓங்கார வடிவாய் இருக்கிறார், என்பதன் உண்மை புலப்படுகின்றது. பகவத் கீதையில் பிரம்மத்தைப் பற்றி அருச்சுனனுக்கு கூறுமிடத்து கண்ணபரமாத்மா **"நானே ஓங்காரமாய் இருக்கின்றேன்"** என்கின்றார்.

ஐம்பூதங்களும் ஓங்காரத்தினின்று தோன்றின. அசையும், அசையாப்பொருட்கள் எல்லாம் ஓங்காரத் துள்ளே தோன்றின. மூவகை உயிர்களும் ஓங்காரத்துட் சார்ந்தன. ஓங்காரத்துள்ளே ஆருயிர் உரு, அருள் உரு, அருளோன் உரு அனைத்தும் தோன்றும். இக்க ருத்தையே,

*ஓங்காரத்துள்ளே உதித்த ஐம் பூதங்கள்*
*ஓங்காரத்துள்ளே உதித்த சராசரம்*
*ஓங்காரதீதத் துயிர் மூன்றும் உள்ளன*
*ஓங்காரசீவ பரசிவரூபமே!*

என்ற திருமந்திரம் கூறுகின்றது. ஐம்பூதங்களாகவும் விரிந்து அண்டபகிரண்டங்களில் தோன்றியுள்ளது பிரம்மம். இந்த ஐம்பூதங்களுள் முதற் தோற்றமான ஆகாயமே ஓசைக்கு முதற்காரணம். இந்த ஓசைக்கு முதற் தோற்றம் ஓங்காரம். முதல் ஓசையாகிய "ஓம்" அண்ட பகிரண்டங்களிலும் ஒலித்துக் கொண்டிருக் கிறது. இந்த ஓங்காரமே எல்லா மந்திரங்களிலும் பீஜ மந்திரமாகவும் இருக்கிறது. சப்தப் பிரம்மம் அல்லது நாதப் பிரம்மம் எனப்படுவதும் இதுவே. முதற்கண் தோன்றுகின்ற ஓங்காரமே பிரணவப் பொருளாகும். இதனாலேயே ஓங்கார மூர்த்தியாகிய கணபதிக்குப் பூஜை செய்த பின்பே ஏனைய தெய்வங்களுக்குப் பூஜை நடை பெறுகிறது. பரவஸ்து ஓசை வடிவில் இயங்குகிறது. அகில அண்டத்தின் இயக்கம் உண்டுபண்ணுகின்ற ஓசையே ஓங்காரம். ஓசை ஒலியெல்லாம் ஆகி இருப்பவன் சிவன். **"ஓவாத சத்தத்து ஒலியே போற்றி"** என்று போற்றப்படுவதும் அவனே. ஆகவே தான் முதலோசையாக உள்ளதும் எங்கும் என்றும் ஒலித்துக் கொண்டிருப்பதுமான "ஓம்" பீஜ மந்திரமாக உள்ளது. இயற்கை முழுவதும் ஒலித்துக் கொண்டிருகின்ற இந்த ஓங்காரம் எல்லோருக்கும் பொது. இதை எல்லோரும் உச்சரிக்க வேண்டும்.

இந்த ஓங்கார மந்திரத்தை நாம் இடையறாது உச்சரிப்பதால் அந்த நாதப் பிரம்மத்தையே நாம் வணங்குகிறோம், போற்றுகிறோம், சிந்திக்கிறோம். எனவே ஓங்காரப் பொருளை உணர்ந்து அந்த மூலமந்திரத் தையே இடையறாது உச்சாடனம் பண்ணி வருவதனாலேயே மன ஒருமைப் பாடு பெற்று ஆழ்ந்த தியானத்தில் அமிழ்ந்த வழி பிறக்கும்

**ஒரு பக்தை**

# The Holy Mother Sarada Devi

Divinity manifested as the Holy Mother Sarada Devi to Illumine and sanctify the earth. In the life study of Sarada Devi we see two different aspects of her, the outer human form, of the virgin mother in perfect purity and the inner mother of divine stature. As a simple village woman we picture her sitting on a mat, wrapped in a white saree which partly covered her head and long black hair hanging down. This form ate, slept, spoke and similed as an ordinary human being would do. This form was subject to change, got older, it was born therefore it perished. It had a beginning and an end. But the Divine Mother is ever omnipresent and continues to be a constant source of inspiration to countless seekers then and now. Sri Ramakrishna referring to her said "the mother who is there in the temple, the same mother is within this (referring to his own body), again it is the same mother who is in the form of the Holy Mother Sarada Devi." This Holy Mother Sarada Devi emanated limitless love, compassion and Shakti-dynamic power.

Let us glance at the salient features in mother's life. Sarada was just five years old when her father an austere brahmin decided to marry her to a priest who was in charge of the Kali temple, far away down the Ganges at Dakshineswar. All young girls married in this way continued to live with their parents for several years before they embarked into married life. She too grew up with her parents in the village. From her mother she learned everything that was expected of a woman, to attend to the household chores, to live in silence always, to cover her face with her saree so that no stranger could look upon her, to accompany her mother to the village temple and to make her offerings to the Goddess. Her husband meanwhile concerned only with God had to all, appearances forgotten her.

Sarada was eighteen years when whispered rumors reached her that her husband had gone mad as he was seen speaking only to this Divine Mother Kali, the powerful Goddess at the shrine of Dakshineswar. People referred to her as the mad man's wife. She was tormented by unknown fear and anxiety. She thought, 'since there is all this talk, I will go at once to see how he is'. Sarada hurried with her father, joining a group of pilgrims to the Ganges.

When she saw her husband her apprehensions vanished and her mind was at peace in a minute. He paid her solemn homage and said "I am at your service." He was quite normal and was full of bliss and love. Sarada now had only one goal in life-to worship God by serving Sri Ramakrishna her husband. "I have come to help you on your chosen path", this was all she said and that said everything. The utter self-sacrifice she made to carry out her promise is beyond compare. Though married, her innocent heart had already become that of a Sanniyasini - nun. Her master, Guru and husband gave himself to the Divine Mother Kali and Sarada gave herself to him. Eight weeks had passed since she arrived, during this time she saw him often in a state of Samadhi. On the day of Shodasi Puja, (worshipping of the Divine Mother as a sixteen year old young woman) in the silence and solitude of the night Ramakrishna performed this worship with Sarada Devi seated on the altar. In the eyes of him, Sarada was the Divine Mother herself. Prayers and mantras arose from his lips. He awakened the per-

sonification of pure consciousness, that beginingless, Shakti -endless power in Sarada's body. At the end of the ritual he made an offering to her feet and prostrated himself before her. Sarada now as the Holy Mother accepted like an image the worship and obeisance of this unique spiritual master of the age. Even after this, there was no change in her outward life. People recount, how while retaining the naive and charm of an innocent child, she provided the maternal affection for thousand's of Sri Ramakrishna's spiritual children and devotees.

Another phase of her life opened up, her husband left his body and she accepted all the austere regiment of her position in accordance with the discipline imposed upon a brahmin widow. Sri Ramakrishna had predicted that Sarada would impart knowledge to all. He said, "Sarada Saraswathi has come to impart knowledge, lest through her beauty unholy thoughts should arise in the men's mind, to their harm, she has disguised her beauty". These words were fulfilled, she was venerated by the disciples and devotees of Sri Ramakrishna, who sought her advice in all matters. From the prayers and the sankalpa - will of the Holy mother arose religious institutions and monasteries. Ever watchful, she was the center and source of the well established institutions of Sri Ramakrishna in India and abroad.

As the Divine Mother she accepted the burdens of all who sought refuge in her irrespective of caste, religion, holiness or sinfulness. She said, "we have come just for these, if we will not take on the sorrow of their sins, if we will not accept them then who else will bear the burden of their sins and those who suffer". For almost forty four years mother sacrificed her life, her children poured all their impurities at her feet, the embodiment of purity, the tapasivini in the form of forbearance. Her feet were scorched" sometimes I feel as if they were being stung by hornets"she said.

From childhood the art of not seeing others' faults was prominent in her. What ever the circumstance, she would pardon a person's offence. "If you want peace, my child do not see others faults, see your own. No one is a stranger, my child, the whole world is one" were her last words.

*Dr. (Mrs.) Vimala Krishnapillai.*
President
Sri Ramakrishna Sarada Samiti

---

Non - Injury, truth, non stealing, punity, self control,
giving gifts, control of mind, compassion, forbearance,
these virtues should be practised by all.

**Yajnavalkya**

# THE COMMITTEE OF
# THE SRI RAMAKRISHNA SARADA SAMITI



**LEFT TO RIGHT**

**Seated on the Floor**

Mrs. K. Shanmugaratnam, Miss R. Somasundaram, Mrs. S. Srinivasan, Mrs. S. Bhaskaran, Mrs.S. Pararajasingam, Miss N. Velupillai, Miss S. Ponnampalam

**Seated on Chairs.**

Mrs. T. Wijayaratnam, Mrs. M. Saravanapavananthan, Mrs. A. Ramanathan, Miss V. Kanapathipillai, Desabandu Miss N. Kasipillai, Mrs. V. Krishnapillai, Mrs. P. Somakandan, Mrs. G. Subramaniam, Mrs. S. Theiventhiram.

**Standing**

Miss P. Nagalingam, Mrs.R. Kamaleswaran, Miss V. Rajaratnam, Miss J. Kulasekaram, Miss Y. Visvalingasarma, Mrs. S. Navaratnam

**Absentees :**

Miss K. Ramupillai, Mrs. P. Nadesan, Mrs. S. Tharmalingam, Mrs. N. Rajaratnam, Miss K.M. Rajeswary

# ஈழமணித் திருநாட்டில் ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சமிதியின் தோற்றம், வளர்ச்சி, இலக்கு

### *சாரதா மிஷன் தோன்றுவதற்கான பின்னணி*

இந்து மதத்தின் ஒப்பற்ற ஒரு சமய ஸ்தாபனமாக உலகெங்கும் கிளைகளைப் பரப்பி சமய, சமூக, ஆத்மீகப் பணி புரிந்து வரும் இராமகிருஷ்ண மிஷனைப் பற்றி நாம் இங்கு கூற வேண்டிய அவசியமே இல்லை. இந்த நிறுவனத்தை ஆரம்பித்து வைத்த சுவாமி விவேகானந்தர் பெண்களுக்கும் இது போன்ற ஒரு ஸ்தாபனம் உருவாக வேண்டும் என்று பெரிதும் விரும்பினார். அதற்கான திட்டங்களையும் அப்போதே வகுத்து வைத்தார். பெண்கள் கல்வியிலும், பண்பாட்டிலும், ஆத்மீகத்திலும் முன்னேற்றம் காண்பதற்குப் பெண்களே ஒரு குழுவாகச் சேர்ந்து பெரு முயற்சியுடன் பணிபுரிய வேண்டும், அதற்கான ஸ்தாபனம் ஒன்று உருவாக வேண்டும் என்று விரும்பிய சுமாமிஜீ பெண்கள் ஸ்தாபனம் எப்படிப்பட்ட ஒரு சந்நியாச மடமாக அமையலாம், அதன் தலைமைப் பீடம் எங்கே இடம் பெற வேண்டும், அதில் சேர்ந்து சந்நியாசம் மேற்கொள்ளும் பெண்கள் என்னென்ன தகைமைகள் கொண்டிருக்க வேண்டும், சந்நியாச வாழ்க்கை மேற்கொள்வோர் தமது சொந்த ஆத்மீக விடுதலை பெறுவதோடு அனைத்து மக்களினதும் – முக்கியமாகப் பெண்களினதும் சிறுவர் சிறுமியரதும் – வளமான வாழ்வுக்கும் ஆத்மீக விடுதலைக்குமாக உழைக்க வேண்டும் என்ற விபரங்கள் யாவற்றையும் அப்போதே திட்டமிட்டு எழுத்திலே வடித்து வைத்தார்.

இந்தத் திட்டத்திற்கு அமையவே பெண் குலத்துக்கே உயர் நெறி கற்பித்து உத்தமகுரு ஸ்தானம் அடைந்த தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியாரை மையமாகக் கொண்டு அவர் பெயரிலேயே 1954ஆம் ஆண்டு கல்கத்தா நகருக்கு அண்மையில் கங்கைக் கரையோரம் உள்ள தக்ஷிணேஸ்வரம் என்ற புண்ணிய மண்ணில் சாரதா மிஷன் நிறுவப்பட்டுள்ளது.

அன்னை சாரதா தேவியாருடன் கூடவே இருந்து அவருக்குப் பணிவிடை செய்து, அவரிடம் வாழ்க்கை நெறியைக் கற்றதோடு, பல நல்லுபதேசங்களையும் பெற்று ஆத்மீக சாதனை செய்த 'சரளாதேவி' என்ற பூர்வாச்சிரம பெயர் பெற்றிருந்த ப்ரவ்ராஜிக பாரதிப்ராணாஜீ இந்த மிஷனின் முதல் தலைவியாக நியமிக்கப்பட்டார். அவருடன் வேறு ஏழு பிரம்மச்சாரிணிகளும் சாரதா மடத்தின் இயக்குநர்களாகப் பணி புரிந்தனர். இவர்கள் 1959ஆம் ஆண்டிலேயே சந்நியாசம் பெற்றனர்.

சாரதா மிஷனின் பொதுச் செயலாளர் ப்ரவ்ராஜிக முக்திப் ப்ராணாஜீயும், ப்ரவ்ராஜிக ஆத்மப்ராணாஜீயும் 1968ஆம் ஆண்டில் சேவைக்கே தன்னை அர்ப்பணித்த சகோதரி நிவேதிதைக்கு எடுக்கப்பட்ட நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுவதற்காக நமது நாட்டில் வந்து இலங்கை மண்ணைப் புனிதப்படுத்தினார்கள். அவர்களது அருளாசியும், ஆலோசனையும் எமது நாட்டிலும் சாரதா மடத்தின் கிளை ஒன்று உருவாக வேண்டும் என்ற புனிதமான சிந்தனையை அடியார் உள்ளங்களில் தோற்றுவித்தது.

### *இலங்கையில் சாரதா சமிதியின் தோற்றமும் அதன் பணிகளும்*

1970ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் திகதி ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜனன தினமன்று திரிமூர்த்திகளாம் ஸ்ரீ குருமஹராஜ், ஸ்ரீசாரதா தேவியார், சுவாமிஜீ இவர்களின் திவ்விய ஆசியும், அன்பு வழிநடத்தலும் முன்நிற்க, அப்போது இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளையின் தலைவராக இருந்த ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்தஜீ அவர்கள் இதய சுத்தியோடு கூடிய ஆசி வழங்கி, சாரதா சமிதியை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்கள். எமது நாட்டில் சாரதா மடத்தின் கிளை ஸ்தாபனம் உருவாகிப், படித்த பெண்கள் பொதுப்பணி, சமயப் பணி, ஆத்மீகப் பணி புரிவதற்கான ஒரு தலைமைப் பீடம் அமைக்கும் முயற்சியில் 13 வருடங்களாக ஈடுபட்டு வந்தது இந்தச் சங்கம். அதே வேளை பல்வேறு சமய சமூகப் பணிகளையும் மேற்கொண்டது.

மனநோயாளர் மருத்துவ மனைக்குச் சென்று அவர்களுடன் சாவகாசமாகக் கலந்துரையாடி உணவு வழங்கி வந்தது.

ஜிந்துப்பிட்டியில் உள்ள மஹாராஜா சத்திரத்தில் அவ்விடத்தில் வதியும் வறிய சிறுவர்களுக்கு 'கெயர்' ஸ்தாபனம் கொடுத்த திரிபோஷ உணவை வழங்கி சிறுவர்களின் ஆரோக்கியமான வாழ்வுக்கு வேண்டிய ஆலோசனை கூறி மருந்து வகைகளையும் வழங்கி வந்தது.

பம்பலப்பிட்டி ஹில்டன் பிளேசில் உள்ள 16ஆம் இலக்க இல்லத்தில் பாலர் பாடசாலை ஒன்றையும் இலவசமாக நடத்தியது.

முதலுதவி வகுப்புகள் நடத்தி மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கியது.

சிறைச்சாலைக்குச் சென்று இந்துக் கைதிகளுக்கு பஜனை, பூசையுடன் அறிவுரையும் வழங்கி வருகிறது.

மகசீன் சிறைச்சாலையில் பிள்ளையார் கோயில் ஒன்று ஸ்தாபித்து வருகின்றது.

இராமகிருஷ்ண மிஷன் வாசிகசாலை மண்டபத்தில் தையல் வகுப்பு ஒன்று நடாத்தியது. அது தொடர்ந்து 1986ஆம் ஆண்டிலிருந்து சாரதா குடீரில் நடைபெற்று வருகிறது.

வெள்ளப்பெருக்கு, சூறாவளி, இனக்கல வரங்களினால் பாதிப்புற்ற மக்களுக்கு நிவாரணம் வழங்கி வருகிறது.

இந்து சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தொடர் கருந்தரங்குகள் நடத்தி வருகிறது.

இன்னும் இது போன்ற பல பணிகளில் ஈடுபட்டுவரும் ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சமிதி தனது பணிகளை விரிவுபடுத்தி அதன் நோக்கங்களை நிறைவேற்று வதற்குத் தனியான ஒரு கட்டிடம் அவசியம் என்பதனை உணர்ந்தது. சமிதியின் பணிகள் சிறக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட இராமகிருஷ்ண மிஷன், விவேகானந்த வீதிப் பக்கமாக 12 பேர்ச் நிலத்தை குத்தகை அடிப்படையில் வழங்கியது. பரந்த உள்ளமும் பரோபகார சிந்தையும் கொண்ட பல அன்பர்கள் வழங்கிய நன்கொடையையும், 13 ஆண்டுகளாக கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள் மூலம் சேர்த்த பணத்தையும் கொண்டு கட்டிடம் அமைக்கும் வேலையை ஆரம்பித்தது. 1983ஆம் ஆண்டு மே மாதம் கட்டிடத்திற்கு அத்திவாரம் இடப்பட்டது. ஆனால் அதே ஆண்டு யூலை மாதத்தில் கொழும்பில் இடம் பெற்ற இனக்கலவரம் காரணமாகச் சோர்வுற்றிருந்த சமிதி உறுப்பினர் கட்டிட வேலைக்கு முற்றுப்புள்ளி இட்டனர். ஆனால் திருவருட் குறிப்பு வேறாக இருந்தது. ஸ்ரீ மத் சுவாமி பிரேமாத்மானந்தஜீ அவர்களின் உற்சாக வார்த்தைகள் உறுப்பினர் உள்ளங்களில் புத்துணர்ச்சியையும் புதியதோர் உத்வேகத்தையும் ஊட்டின. கட்டிட வேலை ஆரம்பமாயிற்று. வேண்டிய பொருளுதவி உள் நாட்டிலிருந்தும் வெளிநாட்டி லிருந்தும் வந்து சேர்ந்தது. 1986ஆம் ஆண்டில் கட்டிடம் பூர்த்தியாகி, மே மாதம் 23ஆம் திகதி வைகாசி மாதத்து விசாக பூரணை தினத்தன்று, திறப்பு விழா அமைதியான, ஆனால் நல்ல ஆத்மீகச் சூழலில் சிறப்பாக நடந்தேறியது. ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்தஜீ மஹாராஜ் அவர்கள் திரைநீக்கம் செய்து கட்டிடத்தைத் திறந்து வைக்க, ஸ்ரீ மத் சுவாமி சமக்ரானந்தஜீ அவர்கள் சமயச் சடங்குகளை நிறைவு செய்து வைத்தார்கள். கட்டிடத்திற்கு "சாரதா குடீர்" எனப் பெயரிடப்பட்டது. அன்னை ஸ்ரீ சாரதா தேவியார், ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமிஜீ ஆகிய மூவரும் அருள்பாலிக்கும் வகையில், மூவரது திருவுருவப் படங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. காலை, மாலை பூசை வழி பாடுகளும் பிரார்த்தனைகளும் இடம் பெற்று வருகின்றன.

## *சாரதா குடீர் விடுதி*

குடீரில் 15 பெண்கள் தங்கி இருந்து வெளியே வேலைக்குப் போய் வருகிறார்கள். அவர்களுக்கு வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் யாவும் செய்து தரப்பட்டுள்ளன. அவர்கள் குடீரில் நடைபெறும் சமய நிகழ்ச்சிகள் யாவற்றிலும், சமிதியின் சமூகப் பணிகளிலும் பங்கெடுத்துக் கொள்கின்றனர். சாரதா குடீர் வெறும் விடுதியாக மட்டு மல்லாது, அங்கு வசிப்போர், இந்துப் பண்பாட்டின் பின்னணியில் வாழ்ந்து, சமய நெறி நிற்போராக, இந்துப் பண்பாட்டில் ஊறி வருங்கால நற்பிரசைகளை உருவாக்கும் தலை சிறந்த தாய்மாராக, பொதுப் பணிபுரியும் தியாகமுள்ள சமூக சேவையாளராக, துறவு பூண்டு கர்ம யோகிகளாகி, தெய்வீக வாழ்வு வாழ்வோராக விளங்கக் கூடிய வகையிற் செயற்பட்டு வருகிறது.

## *சாரதா மிஷன் கிளை ஸ்தாபனம் தோன்றவேண்டுவதன் அவசியம்*

வங்காளத்தில் தக்ஷிணேஸ்வரத்தில் உள்ள சாரதா மிஷனின் சந்நியாசினிகளை அழைத்து சாரதா மிஷனின் கிளை மிஷன் ஒன்று நம் இலங்கா புரியில் ஸ்தாபனம் ஆக வேண்டும் என்பது சாரதா சமிதியின் குறிக்கோள். சற்று ஆழமாக நோக்கினால் நமது பெண்கள் திருமணம் செய்து வாழும் வாழ்வுதான் ஒரே வாழ்வு என்ற மயக்கமான எண்ணத்தை மாற்றி, நிலைத்த பேரின்பத்தை அனுபவிக்கக் கூடிய துறவறம் என்ற ஒன்று உண்டு, மனத்தூய்மையோடு துறவறம் மேற்கொண்டு, சொந்த ஆன்ம ஈடேற்றம் பெறுவதோடு, பிற மக்களுக்கும் பணிபுரிந்து, அவர்களையும் இவ்வுலகில் மகிழ்ச்சியாக வாழ வைக்க முடியும், அவர்களது ஆன்ம விடுதலைக்கும் வழிகாட்ட முடியும் என்ற உயர்ந்த தத்துவத்தை உணர்ந்து செயற்படுவதற்கு சாரதா மிஷன் சந்நியாசினிகளின் வருகை பெரிதும் உதவும்.

சமுதாயத்தில் பெண்கள் ஆற்றக் கூடிய சேவை மிகப் பெரிது. அதற்கேற்ற எல்லாவகைத் திறமையும், பொறுமையும், அறிவும் ஆற்றலும் அவர்களிடம் உண்டு. ஆனால் அவர்கள் சுயநலம் மறந்து, பிறர் நலம் பேணும் பெருநோக்கோடு வெளியேறி வந்து, ஒரு குழுவாகச் சேர்ந்து திட்டங்களை வகுத்து, செயற்படுவதற்கு மன உறுதியும் உற்சாகமும் பெற வேண்டும். இதற்கு வழிகாட்டக் கூடியவர்கள் எமது சாரதா மடத்துச் சந்நியாசினிகள். அவர்கள் பாரதநாட்டில் பணியாற்றத் தொடங்கி இப்போது 42 வருடங்களே ஆகின்றன. ஆனால் அவர்கள் இக்குறுகிய காலத்தில் பாரத நாட்டில் சாதித்துள்ள காரியங்கள் அளப்பரியன.

செய்யும் பணியெல்லாம் இறைபணி, செய்பவனும் அவன், வினைப்பயனும் அவனுக்கே என்ற மனப்பாங்கோடு பூரண சரணாகதி நிலையில் நின்று, செயலாற்றி சாரதா சமிதியின் குறிக்கோளை நிறைவேற்றி வைக்க வேண்டிய பொறுப்பையும் அந்த இறைமைத் துவத்திடமே ஒப்படைத்து அவன்தாள் பணிந்து நிற்போம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

# Sri Ramakrishna Sarada Samiti In Sri Lanka Its Inception, Objectives, and Growth.

The Ramakrishna Mission was established by Swami Vivekananda in 1897. It has a number of branches all over the world now, propagating the ideals for which Sri Ramkrishna lived. Sri Ramakrishna said, "The essence of existence in each man is Divinity, show by your lives that religion does not mean words or names or sects, but that it means realizing the divine within. "Swamiji was also keen to establish a Math on the same lines for women with the Holy Mother Sri Sarada Devi, the spiritual consort of Sri Ramakrishna as the centre of inspiration. He had indicated the way in which the Sri Sarada Math should be organised and run. Swamiji's wishes were fulfilled in 1954 when the Sri Sarada Math was opened in Dakshineswar on the banks of the river Ganges. It was the year of the Holy Mother's Birth Centenary. Since then a number of young educated women have joined the Math and undergone training. Some have been initiated into Brahmacharya and Sannyasa.

Pravrajika Muktipranaji, the General Secretary of the Sri Sarada Math and Ramakrishna Sarada Mission, and Pravrajika Atmapranaji visited Sri Lanka in 1968. They came here to participate in the Sister Nivedita Brith Centenary Celebrations and also to address the assembly. It was during this visit that the idea of establishing a Sarada Samiti in our own land was put forward.

**FOUNDING THE SARADA SAMITI IN SRI LANKA AND ITS ACTIVITIES:**

Guided by the Holy Trinity - Sri Ramakrishna, the Holy Mother anb Swamiji - and also with their abundant blessings, the Sri Ramakrishna Sarada Samiti of Sri Lanka was inaugurated on 9th March 1970, the Jayanthi Day of Sri Ramakrishna by Srimath Swami Prematmanandaji, who was the President of the Sri Lanka Branch of the Ramakrishna Mission then. The whole hearted blessings showered by Swamiji on that day, made this Samiti to grow from strength to strength over the years.

When the Samiti was started, it functioned in the premises of the Ramakrishna Mission. The objectives of the Samiti were and are, to carry out religious, educational, cultural and social activities mainly among women and children. The members of the Samiti therefore engage in activities like the following from time to time depending on the circumstances and the availability of funds.

**ACTIVITIES WHICH ARE CONTINUOUS:**

Visit prisons and perform pujas, conduct bajans and also give talks.

The Samiti had installed the Pillaiyar Statue in the temple in the Magazine prison, and is maintaining it.

Conducting regular needle work classes.

Unfortunately the free pre-school at No. 16, Hildon Place, Bambalapitiya had to be closed, because the owner wanted the building and no other convenient building could be found.

**ACTIVITIES UNDERTAKEN FROM TIME TO TIME.**

Provide relief and assistance for those who are affected by natural disasters like floods, cyclones and such

Provide relief and assistance for refugees.

Seminars and workshops are conducted for teachers teaching Hinduism in schools.

**OTHER ACTIVITIES THAT WERE UNDERTAKEN:**

Visited patients in the hospitals for the mentally sick. While trying to make them happy, food was also distributed to them.

Visited the poor and destitute children in Gintupitiya and distributed "Thriposha" supplied by the Care Organisation. They were also provided with medicines and given advice on health care.

Conducted First Aid classes and certificates were issued by the St. John Ambulance Association to those who successfully completed the course.

In course of time it was decided to house the Samiti in a building of its own. This was to be construted on a piece of land on the Vivekananda Road given on lease to the Samiti by the Ramakrishna Mission. Philanthropists and well - wishers came forward with financial assistance. Cultural programmes were organised and additional funds collected. The foundation was laid in May 1983. Then came a set- back due to the ethnic disturbances that broke out in July 1983. But by God's Grace and the inspired enthusiasm of Srimath Swami Prematmanandaji, there was renewed interest in carrying on with the project. Donations were rceived from devotees from Sri Lanka and abroad and the building was completed in 1986.

The building was opened after a pious, simple, quiet ceremony on 22nd May 1986 which was the Vesak Full Moon Day. The plaque was unveiled by Srimath Swami Prematmanandaji Maharaj. Pictures of the Holy Mother Sri Sarada Devi, Sri Ramakrishna and Swami Vivekananda were ceremonially installed. The religious rites were performed by Srimath Swami Samagranandaji Maharaj. The building was named 'Sarada Kutir'. Ever since then, poojas and bajans are conducted daily in the morning and in the evening.

## SARADA KUTIR HOSTEL:

There are fifteen hostellers. They are mostly young working women. They are provided with all the facilities for living a disciplined life based on religious principles. Opportunities are also provided for participating in the religious, social and cultural activities organised by the Samiti.

## PLANS FOR THE FUTURE

1. **Start a Home for Elders.**
   In the changing pattern of society today, Homes for Elders have become a pressing need. Though we are keen to start one, we are unable to go ahead with our plans, because it is not possible to find a suitable building and also because we do not have enough funds.

2 **Establish a branch in Sri Lanka of the Sarada Math and Mission, at Dakshineswar**

In order to establish a branch of the Sarada Math and Mission in Sri Lanka the Samiti will have to invite Sanniyasinis of the Sarada Math in India. This Math has been in existence for the last forty years. The virtuous sanniyasinis there, with their long years of experience can be a tremendous source of inspiration to those among us, who wish to embrace the life of renunciation.

The Sarada Math (a home for sanniyasinis) when established will provide young and older women a chance to dedicate their whole life to the service of the Lord. They will be given a training to make them see the Paramatman in every Jeevathman and make them serve Him by their selfless service to mankind. Also the training will make them lead a pure and pious life of renunciation.

Let us surrender ourselves to the Divine and pray fervently to lead us along the spiritual path and with His Blessings may the Samiti progress day by day.


*Om Shanthi ! Shanthi !! Shanthi !!!*



HOSTEL RESIDENTS ARE AT PRAYERS



NEEDLE WORK CLASS AT SARADA KUTIR





HOLY TRIOS ON PROCESSION TO SARADA KUTIR




SRIMAT SWAMI ATMAGHANANANDAJI MAHARAJ SPEAKING AT THE SEMINAR CONDUCTED BY THE SAMITI









# பிரார்த்தனையும் வழிபாடும்

பிரார்த்தனை எல்லா மதங்களிலும் முக்கியமான சாதனை மார்க்கமாக அமைந்துள்ளது. இந்து மதத்தில் பிரார்த்தனை முக்கிய இடத்தைப் பெறுவதோடு ஆழ்ந்த பக்தி இயல்புகளையும் பெற்று விளங்குகிறது.

பகவத் கீதையில் பகவான் தன்னை நான்கு விதமான பக்தர்கள் வழிபடுவதாகக் கூறுகிறார். அவர்கள் துன்புற்றோன், செல்வத்தை நாடுவோன், ஞானத்தை நாடுவோன், ஞானி ஆகியோராவர். இவர்களுள் சுயநலமில்லாத தூய பக்தியை நாடும் ஞானியே மேலானவன் என்று பகவான் பகர்கின்றார்.

உணவு நமது ஸ்தூல சரீரத்திற்குப் புஷ்டியைக் கொடுப்பது போல பிரார்த்தனையும், வழிபாடும் நமது மனத்துக்கு வலுவூட்டுவதுடன் ஆத்ம விழிப்பை ஏற்படுத்துகின்றது. மேலும் பிரார்த்தனை நமது மனத்தின் அழுக்கை அகற்றி இறைவன் வாழும் ஆலயமாக மாற்றுகிறது

வழிபாடு நமது மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களையும் தூய்மையாக்குகிறது. இதற்கு நமது புராணங்களிலும், அடியார்களின் சரித்திரங்களிலும் அநேக சான்றுகளைக் காணலாம். மனம் கசிந்துருகிச்செய்யும் தூய பிரார்த்தனைக்கு இறைவன் செவி சாய்க்கிறான் என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுகிறார். இறைவனோடு பேசி, இறைவனோடு வாழ்ந்த அப்பெருமானின் வாழ்வும், வாக்கும் பிரார்த்தனைக்கும், வழிபாட்டிற்கும் ஒரு பெரும் உதாரணமாக விளங்குகிறது.

இறைவனுடைய கருணை அனைவருக்கும் பொதுவானது. காற்றுச் சமமாக எல்லா இடங்களிலும் வீசுகிறது. பாய்மரத்தை விரித்து காற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் ஓடக்காரன் ஆற்றைச் சுலபமாக விரைவில் தாண்டுகிறான். அது போல இறைவனின் கருணையாகிய காற்று பக்தன் மீதும், பாவி மீதும் சமமாகவே வீசுகின்றது. பிரார்த்தனை, வழிபாட்டின் மூலம்,இறைவனின் கருணை நமக்குக் கிடைக்கிறது இதன் மூலம் பிறப்பு, இறப்பு என்னும் சம்சாரசாகரத்தையே தாண்டி விடலாம் என எல்லாப் பக்த ஞானிகளும் கூறுகின்றார்கள்.

நாம் இறைவனை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தால் இறைவன் நம்மை நோக்கி பத்து அடி எடுத்து வைப்பான் என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவார். நாம் ஓர் அடி எடுத்து வைக்கும் முயற்சியைச் செய்ய வேண்டும். இதையே திருவருட்பயனிலும் –

***"நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்***
***சலமிலன் பேர் சங்கரன்"***

என்றார் உமாபதி சிவாச்சாரியார். பகவான் கிருஷ்ணரும் இக்கருத்தைக் கீதையில் உறுதிப் படுத்துகிறார். நான் எல்லா உயிர்களிடத்தும் சமமாயுள்ளேன். எனக்கு வெறுக்கத்தகுந்தவனும் இல்லை. விரும்பத்தகுந்தவனும் இல்லை. ஆனால் எவர்கள் என்னை பக்தியினால் வழிபடுகிறார்களோ அவர்கள் என்னிடத்திலுளர். நானும் அவர்களிடதிலுள்ளேன்.

ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இடையேயுள்ள அனாதியான ஐக்கியத்தை மீண்டும் புதுப்பிக்க உதவும் சிறந்த கருவி பிரார்த்தனையும் வழிபாடுமாகும்.

**சுவாமி அஜராத்மானந்தா**
ஸ்ரீராம கிருஷ்ணமிஷன்,
கொழும்பு –6

---

படமாடக்கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாடக்கோயில் நம்பர்க் கங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக்கோயிற் பகவற்கதாமே.

திருமந்திரம்

# சேவையின் சிகரமான மூவர்

இந்துக்களைப் பொறுத்தளவில் வேத காலம் மனிதப்பண்பாட்டின், அறிவின், மன ஆற்றலில், உலகியல் வாழ்விலும் கூட உச்சநிலையெய்தியிருந்த பொற்காலம் எனக் கருதமுடியும். மனிதன் பிறக்கும்போதே இறக்கும் நாளும் உண்டென்பதைப் புரிந்து கொண்டும் டவன், மானிடப்பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட இம்மண்ணுலக வாழ்வின் மனிதனுடைய குணாம்சங்கள், பண்புகள், வாழ்வின் வகைகள் எப்படியெல்லாம் அமைந்திருந்தால் வெற்றியுடன் முகம் கொடுத்து மறு உலக வாழ்வையும் வரவேற்கலாம் என்ற மனத் தெளிவோடு வாழக்கூடிய நெறிமுறைகள் வகுக் கப்பட்டிருந்தன.

இவற்றை அலசி ஆராய்ந்து நெறிப்படுத்திய அறிஞர்களோடு சமூகத்தின் சரிபாதியான பெண்ணினமும் பணிபுரிந்திருப்பதைச் சான்றுகள் மூலம் அறிகிறோம். வேதவித்துக்களோடு அறிஞர்களாகப் பெண்களும் கலந்துகொண்டு சுலோகங்களை ஆக்கவும் அவற்றிற்கு பொருள் எழுதவும் விளக்கங் கூறவும் கூடிய ஆற்றலும் தகைமையும் மிக்க மகளிரும் பெரும்பங்கு புரிந்துள்ளனர்; அறிவு ரீதியில் பெண ஆண் என்ற பேதமின்றி சமமாகச் சிந்தித்துள்ளனர். மைத்ரேயி, உலோபா முத்திரை போன்றோரின் கருத்துக்கள் அறிஞர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன.

எனினும் கால தேசவர்த்தமானங்களின் பாரிய மாற்றங்களால் பெண்ணின் அறிவில் பின்னடைவு ஏற்பட்டது. ஒரு கால கட்டத்தில் பெண்கல்வி மறுக்கப்பட்டது. பெண் மாயத்தோற்றமென்றும், பெண் சிற்றின்ப வாழ்வுக்கே உரியவள் என்ற கருத்தும் மிதந்து நின்றது. இத்தகைய காரணங்களால், பெண்ணுடைய சுதந்திரம் பறிக்கப்பட்டது. பெண் பாவத்தின் சின்னம், அடக்கி ஒடுக்கப்பட வேண்டியவள் என்ற நிலையில் அவள் அடிமையாக்கப்பட்டாள். இல்லத்திற்கு மட்டுமே உரியவள் என்ற கருத்து வலிமை பெற்றது. பெண்ணிற்கு மட்டும் கற்பு அவசியம். அவள் வீட்டை விட்டு வெளியே வந்தால் கற்பு சிதைந்துவிடும். எனவே வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டிவைக்கும் வழக்கம் அவசியமென உணரப்பட்டது.

இந்த நிலையில் இந்தியாக்கண்டமே ஆங்கிலேய ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டு அடிமை நிலையில், அல்லல் பட்டது. சுவாமி விவேகானந்தர் வ.வே.சு. ஐயர் திரு. வி.க. காந்திமகான் சுப்பிரமணிய பாரதியார் போன்ற சுதந்திரவேட்கையால் உந்தப்பட்ட பெரியோர்கள் பெண்ணுக்கு விடுதலையின்றேல் நாட்டிற்கு விடுதலை கூடுவது எங்ஙனம்? என்று கொதித் தெழுந்தனர். பெண்ணுக்கு விடுதலைவேண்டும் பெண் கல்வி வற்புறுத்தப்படவேண்டும். பெண்ணின் அடிமைவிலங்கு நொருக்கப்பட வேண்டும் என்ற கருத் துக்களையெல்லாம் கொண்ட பாடல்கள் கருத்துக்கள் கட்டுரைகளை மக்கள் மத்தியில் புகட்டினர்.

பெண்கல்வி கற்றால்தான் நிலத்தின் தன்மை பயிருக்குண்டாவதுபோல் அறிவுள்ள மக்களைப் பெற்றெடுக்க முடியும் என்ற உண்மை உணரப்பட்டது.

ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வதற்கு கல்வியறிவோடு ஏனைய உரிமைகளும் வழங்கப்பட வேண்டுமென சமூக நலன் விரும்பிகள் கல்வியலாளர்கள் அறிவு ஜீவிகள் கருதினாலும் கூட, அடக்கி யொடுக்கப்பட்டு பழக்கப்பட்டு விட்ட பெண்களின் மத்தியிலே சில பழைய பழக்க வழக்கங்கள் தப்பான நம்பிக்கைகள் வேரூன்றிவிட்டன. இதனால் பெண்கள் தமது அறிவு ஆற்றல் ஆணைவிட மட்டமானதாகக் கருதுகின்றனர். சிலர் தானுண்டு, தன் குழந்தையுண்டு தன் குடும்பமுண்டு என்று மாத்திரம் வாழ்ந்துவிட்டால் அடக்கஒடுக்கமாக வாழ்வைநிறை வேற்றிவிடலாமென எண்ணுகின்றனர்.

கற்ற பெண்கள் மத்தியில் தன்னலப்பாங்கான கருத்துக்கள் இருப்பின் அவற்றை அவர்கள் மறுபரிசீலனை செய்து சமூகத்தின் அங்கம் தாம் என்பதை உணர்ந்து சமூகக் கடமைகளையும் ஆற்ற துணியவேண்டும்.

நாட்டின் விடுதலைக்காகவும் சமுதாயத்தின் ஏற்றதிற்காகவும் துணிச்சலுடன் போரிட்ட, உயர்ந்த இலட்சியங்களுக்காகத் தியாகம் செய்த பல பெண் மணிகளின் வரலாறுகள் எம் கண்முன்னே விரிந்து காட்சி தருகின்றன. இவையெல்லாம் இன்றைய இளம் சந்ததியினருக்கு நல்ல எடுத்துக் காட்டாகவும், உற்சாகமளிக்கும் அம்சங்களாகவும், தமது வாழ்வை நெறிப்படுத்த நல்ல ஊன்றுகோல்களாகவும் அமைந்துள்ளன. இந்த ரீதியிலே ஆழ்ந்து பார்க்கும் போது, சாரதா அம்மையாரின் வாழ்க்கைச் சரிதம் சிந்தனைக்கும் செயலுக்கும் உத்வேகமளிக்கக் கூடிய செயல்பாடுகள் கொண்டிருப்பதைக் காணமுடியும். பள்ளி

சென்று கல்வி கற்காத வறுமை சூழ்ந்த ஐந்து வயதுப் பாலகிக்கி அந்த இளம் ப்ராயத்தில் – கல்யாண மென்றாலே என்ன வென விளங்காத பருவத்தில் கதாதரர் என்ற பிள்ளைத்திருநாமம் கொண்ட ஸ்ரீ ராமகிருஷ்ணர் வாழ்க்கைத் துணையானார்.

கிராமச் சூழலில் சாரதாக் குழந்தையும் ஏனைய சிறுமிகளோடு ஓடிவிளையாடுதல், ஆடுமாடுகளை மேய்த்தல் வயலில் வேலை செய்யும் தந்தை முதலியோருக்கு உணவு கொண்டுபோய்க்கொடுத்தல் போன்றனவற்றில் காலம் கழித்தார்.

பிற்காலத்தில் தனது சொந்த முயற்சியால் வங்க மொழி எழுத்துக்களை வாசிக்கவும் எழுதவும் பழகிக் கொண்டார்.

சிட்டுக்குருவிபோல் வீட்டிற்கும் வயலுக்குமாக ஓடித்திரிந்த சிறுமி திருமணமாகி சில வருடங்களின் பின் தட்சிணேசுவரத்தில் 8 அடி அகலமும் 9 அடி நீளமுமான அறையிலேயே சமையல், சாமான்களை வைத்தெடுக்க, விருந்தினரை உபசரிக்க உபயோகித்தார்; அந்த அறையிலேயே அவர்காலம் முழுதும் கழித் தாரென நினைக்கும்போது நம்மால் ஆச்சரியப்படா மலிருக்க முடியுமா?

எளிமையான வாழ்வும் உயர்ந்த எண்ணங்களுமே மனிதனிடத்தில் அமைதியையும் ஆனந்தத்தையும் அள்ளிச் சொரியும் என்ற அன்னையின் உதாரண வாழ்வு மானிட உலகிற்கே மாண்பு தரும்.

பெண்கள் இல்லறத்தில் மட்டுமல்ல அதற்கு அப்பாலும் பல பணிகளை, மகத்தான சேவைகளை ஆற்றமுடியுமென்பதற்கு துறவு பூண்ட பெண்களின் கைங்களியங்களைப் பார்க்கும்போது சேவையின் சிறப்பு நம்மைப் பூரிக்க வைக்கின்றது.

அன்பு விலைமதிப்பற்ற உயர்ந்த பொருள். எல்லோரிடத்தும் அன்பாய்ப்பழகுதல் இலகுவானதல்ல. எனினும் மனப்பயிற்சியால் இறைபக்தியால் எல்லா உயிர்களிடமும் அன்பு பூண்டுவாழும் வாழ்வு போற்றத் தக்கது. 'அன்பே சிவம்' என்ற இறை தத்துவத்தை எல்லோரும் அறிய வாழ்ந்து காண்பித்தார். இனிய வார்த்தை எமது வாழ்வுக்கு வெற்றிக்கனியாகும் "கொதிக்கும் நெஞ்சையும் குளிர்மொழி அணைக்கும்" என்ற சுவாமி விவேகானந்தரின் பொன்மொழி இனிய வார்த்தைகளின் சிறப்பை வற்புறுத்தும்.

இப்படி எளிய இனிய பண்புகளால் தன்னைச் சுற்றியிருந்த சமூகத்தை வென்றும் இன்னும் அவரது நாமம் நிலைத்து நிற்கின்றது.

ஸ்தாபன ரீதியாக பகவான் ஸ்ரீ பரமஹம்ஸ தாஸருடைய ஆன்மீக சொரூபத்தின் ஒளியை மக்களுக்கு எடுத்து விளக்கவென அன்னையாரின் பீடம் சுவாமி விவேகானந்தரின் முயற்சியினால் ஸ்தாபிக்கப்பட்டாலும், அன்னையில் ஆற்றலும் அருளுமே இதனை ஆட்சிசெய்து வந்தது.

உயர்கல்வி கற்ற, பல அறிவுப் பயிற்சிகளையும் பெற்ற பெண்களுக்கு ஈடாக அன்னையின் ஆற்றல் பகவானுடைய ஆன்மீக நம்பிக்கைகளைப் போதிக்கும்பண்பு ஒரு சமூகத்தையே இறைபக்தியோடு இட்டுச் செல்லும் தலைமைத்துவம், மாண்பு மகத்துவம் எண்ணி எண்ணி வியக்கக் கூடியதே!

அம்மையாரவர்கள் தன்னைப் பற்றியோ, தனது தலைமைத்துவம்பற்றியோ கிஞ்சித்தும் சிந்தித்த தில்லை. அமைதியாக அடக்கமாக திசைதெரியாத, ஏழ்மையான, துயருற்ற பெண்மணிகளுக்கெல்லாம் ஆதரவு நல்கும் அறிவுரை கூறும் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தார்.

இந்துக்களில் கணவனை இழந்தவள் கைம் பெண் எனப்படுவாள். இவர்கள் இவ்வுலக வாழ்வைத் துறந்து எளிய வெள்ளை ஆடை புனைந்து ஆடம்பரமின்றி, எளிமையான உணவு உட்கொண்டு கல்லின் மீதோ பலகையைத் தலைக்குக் கீழ் வைத்தோ உறக்கம் கொள்ளும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. சமூகம் கணவனை இழந்த பெண்களை முழு வியளத்துக்குக் கூடாதவர்களென்றும் அவர்களில் விழித்தால் பாவமெனறும் கருதி அவர்களை ஒதுக்கிப் பதுங்கி மறைந்து வாழவைத்தது. இத்தகைய காலகட்டத்தில் வாழ்ந்த அம்மையாரவர்கள் எளிய தூய்மையான வாழ்வை மேற்கொண்டிருந்தும், பதுங்கி ஒதுங்காமல், பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் போலவே உயர்ந்த உண்மை பொதிந்த செய்திகளை ஒழுக்க நெறிமுறைகளைத் தன்னைச் சார்ந்தோரும் தன்னிடம் அறிவுரைகோரி நிற்போருக்கும் மிகத்துணிச்சலாக, அம்மா என்று சரணடைபவர்களை அன்போடும் இரக்கத்தோடும் ஏற்று அருளுரை நல்கினார். தான் ஒரு பெண், அதுவும் துணைவனை இழந்தவள் என்று ஒரு மூலையில் பதுங்கித் தன்னைத் தாழ்நிலையில் வைத்துத்துயருறவில்லை. பகவான் போதித்த அருள் நெறியைத்தான் உணர்ந்து கொண்டு ஆன்மீகப் பலத்தோடு சேவையாற்றிய சிறப்பு என்றும் நினைவிற் கொள்ளவேண்டியது.

இப்படியே சுவாமி விவேகானந்தரின் சிஷ்யையான நிவேதிதா அம்மையாரைச் சுப்பிரமணிய பாரதியார் தனது ஞான குருவாக ஏற்றுக் கொண்டார்.

அம்மையார் பாரதியாரைச் சந்தித்தபோது, அவர் ஏன் தன்னுடன் மனைவி செல்லம்மாளையும் அழைத்து வரவில்லையென்றார். அதற்கு பாரதியார் ஆண்கள் தாம் செல்லுமிடமெல்லாம் பெண்களையும் அழைத்துச் செல்லும் பழக்கம் தமிழ் நாட்டில் இல்லை யென்பதால், தான் மனைவியை அழைத்துவர வில்லையென்றார் அதற்கு அம்மையார் வீட்டிலே பெண்ணை அடைத்து வைத்துக் கொண்டு உங்களுக்கு சுதந்திரம் வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதா? ஒரு பறவையின் இரு இறகுகளில் ஒன்றை வெட்டிவிட்டால் பறக்க முடியுமா? அப்படித் தான் நாட்டிற்கு சுதந்திரம் வேண்டும் போது சரிபாதியான பெண்ணை வீட்டில் அடைத்து வைத்துக்கொண்டு சுதந்திரம் கேட்பதில் அர்த்த மில்லையெனச் சுட்டிக்காட்டினார். அப்போதே பாரதியாரும் பெண் சுதந்திரத்தின் தேவையை நன்றாக உணர்ந்து உத்வேகம் கொண்டார்.

நிவேதிதா அம்மையாரவர்கள் அந்நிய நாட்டின ராயிருந்தும் சுவாமி விவேகானந்தரின் ஆன்மீக உரையால் கவரப்பட்டு ஆன்மீக சேவைக்குத் தன்னை அர்ப்பணித்ததோடு மக்களின் வறுமை, அறியாமை ஆகியவற்றைப் போக்கி அன்பு பூண்டு அரும்பாடுபட்டு உழைத்தார்.

கிறீஸ்தவ மதத் துறவியான அன்னை திரேசா அவர்களும் சாரதா அம்மையாரைப் போலவே எளிமை, தூய்மை கடமை, பக்தி ஆகியவற்றையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு மக்கள் சேவையே மகேசன் சேவையாக உலகம் முழுதும் கொண்டு செய்து வருகின்றார். 86 வயதை எட்டிப் பிடித்துவிட்ட நலிந்த மெலிந்த தேகத்தையுடைய தெரேசா அம்மையார் உலகம் எங்கனும் அறக்கட்டளைகளை நிறுவி மாபெரும் இயக்கமாக குழந்தைகளின் நலனுக்காகவும் திக்கற்ற முதியோர்களுக்குத் திசை காட்டியாகவும் தொழுநோயாளருக்கு தென்பையும் ஆதரவையும் அளிப்பவராகவும் ஏழை எளிய மக்களுக்கு நல்லாதரவு ஈந்தும் அளப்பரிய சேவை செய்துவருகிறார். இத்தகைய உயர்ந்த பண்புகளையும் தெய்வசிந்தனையும் நலிந்தோர்க்கு சேவையும் ஆற்றும் இவரது உயர்ந்த தொண்டைப் பாராட்டி 1979ல் இவருக்குக் கிடைத்த நோபல் பரிசினால் நோபல் பரிசே பெருமையான இடத்தைப் பெற்றுக் கொள்கிறது எனக் கூறலாம்.

பெண்கள் பொது வாழ்வில் ஈடுபடுவதென்றால் உயர்ந்த கல்வியையோ உயர்ந்த பதவியையோ பெற்றுத்தான் உலகத்திற்குச் – உயர்கல்விகற்றோரோ, உயர்பதவிவகிப்போரோ பொதுச் சேவையில் ஈடுபடக்கூடாதென்பதல்ல – சேவையாற்றவேண்டும் என்றில்லாமல் மக்களுடைய துன்பதுயரங்களை உணர்ந்து, அவை எமக்கேற்பட்ட கஷ்டங்களாக எண்ணித் துயர்துடைக்க முன்வருதல் இறைவனுக்காற்றும் பெரும்பணியாகும்.

பெண்களாலும் இத்தகைய அரிய செயற்பாடு களை ஆற்றி மன்பதையின் மேம்பாட்டிற்கு உழைக்க முடியும் என்ற நம்பிக்கையை மனத்திடத்தை மேற்குறிப்பிட்ட அன்னையரின் வாழ்விலிருந்து நாம் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுபவமாகும். எனவே என்னென்ன துறையில் எவ்வெவ்வகையில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இச் சமூகத்திற்கு தொண்டாற்ற முடியுமோ அப்பணியை மேற்கொள்ள இன்றே எழுமின்! விழிமின்! அன்னையரின் வழியில் உழைமின்!

**பத்மா சோமகாந்தன்**

---

36. இறைவனை மட்டும் நேசிப்பவன் எவனோ அவன் புண்ணியவான் (அன்னை)

37. ஒரு உயிருக்கு உன்னால் மகிழ்ச்சியைக் கொடுக்கமுடியுமானால் உன் வாழ்க்கையின் இலட்சியம் நிறைவேறி விட்டது.

38. நம்பிக்கையும், உறுதியும் இருந்தால் எல்லாம் இருந்ததிற்கு சமம். (தூய அன்னை)

*With the Best Compliments*

*from*

# Sivashanmugarajah & Co.

GENERAL MERCHANTS COMMISSION AGENTS
& CO-OPERATIVE SUPPLIERS

***45,4th Cross Street,***
***Colombo -11,***
***Sri Lanka.***
***T.P 436077***

*With Best Compliments*

*from*

# *A*

# *Well Wisher*

அற்பமாக உள்ள ஒன்றையும் நாடாதே. அதை உன் கால் விரல்களாலும் தொடாதே

– சுவாமி சுவாமி விவேகானந்தர்

# பெண் கல்வியும் இந்தியப்பண்பாடும் சுவாமி விவேகானந்தரின் கருத்துக்கள்.

**பு**ண்ணிய பூமி என்று பெருமையோடு குறிப்பிடப்படும் பாரத நாட்டில் தவப்புதல்வர்களின் வரிசையில் சுவாமி விவேகானந்தரின் பெயர் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தொன்றாகும். இந்திய மண்ணில் தோன்றிய அருட்செல்வர்களில் தலைசிறந்தவர், தேசபக்தர், தத்துவஞானி என்பவை மட்டுமல்ல அவரின் பெருமை. கல்வி பற்றி அவர் கொண்டிருந்த கருத்துகள் சிறப்பாகப் பெண் கல்வி பற்றிய எண்ணங்கள் இன்றும் எம்மைப் பிரமிக்க வைக்கின்றன. இந்தியாவில் நிகழ்த்திய பல சொற்பொழிவுகளிலும் "எழுந்திருங்கள், விழித்திருங்கள். இலட்சியத்தை அடையும்வரை உழைத்திருங்கள்." என்று முழங்கியது வெறும் வார்த்தைகளோடு நின்றுவிடவில்லை என்பதை அவரின் குறுகிய வாழ்நாளில் படைத்த சாதனைகள் நிரூபிக்கின்றன.

எத்தகைய கல்வியை இந்தியப் பெண்களுக்கு அமைத்துத் தரவேண்டும் – சமுதாய சீர்திருத்தங்கள் எவ்வகையில் உருவாக்கப்படவேண்டும் என்பது பற்றி ஆழ்ந்து சிந்தித்த விவேகானந்தர் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் தனது சீடர்களின் மனதில் இவ்வாறான கருத்துக்களை ஆழமாக பதிக்க முயன்றார். "நவீன இந்தியா" என்ற புத்தகத்தில் "பாரத நாட்டின் புத்திரனே, உனது தேசத்தின் பெண்மைக்கு அணிகலமாக விளங்குபவர்கள் சீதையும் சாவித்திரியும் என்பதை மறவாதே! அகிலாண்ட நாயகியின் அடிபிணைக்கு அர்ப்பணமாக நீ பிறந்துள்ளாய் உயர்ந்தோர் தாழ்ந்தோர் எல்லோரும் உனது உடன் பிறப்புக்களே" என்று மக்களுக்கு புத்துயிர் ஊட்டியுள்ளார், வேதங்களில் இந்தியப்பெண்மை பற்றி கூறப்படுபவற்றைப் பெருமையோடு தனது சீடர்களுக்கு எடுத்துச் சொல்லும் சுவாமி விவேகானந்தர், அதே நிலை மீண்டும் நிலவவேண்டும் என்று எதிர்பார்த்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. எந்தவொரு நாட்டில் பெண்மை மதிக்கப்படவில்லையோ அந்த நாடு முன்னேற்ற மடைந்ததாகாது, என்று உறுதியாக நம்பினார். உலகில் உள்ள பெண்களையெல்லாம் தாயின் வடிவமாகப் போற்றிய இராமகிருஷ்ணரின் பிரியமான சீடரிடம் வேறு விதமான கொள்கை இருந்திருக்க முடியாது.

பெண்கல்விபற்றி பேசும்போது – தற்போது நிலவிவரும் முறைகளுக்கு வேறுபட்டதாய் அமைதல் வேண்டும் என்று விவாதித்தார். தன்னம்பிக்கை ஒழுக்கம், கற்பு இவைநிறைந்த வீரமிக்க கல்வியை பெண்களுக்கு தந்தால் அவர்களே தங்களுக்குத் தேவையானவற்றைத் தேடிக்கொள்ள முடியும் என்று நம்பினார். ஜான்சிராணியும் அவளின் வீரமும் சுவாமியைக் கவர்ந்தது போல கார்க்கி, மைத்திரேயி போன்ற உபநிடதகாலப் பெண்களும் அவர்களது சிறந்த அறிவாற்றலினால் சிலாகித்துப் பேசப்பட்டனர். இப்படிப்பட்ட அறிவாற்றலுள்ள பெண்கள்சமுதாயத்தை, உருவாக்கும் கல்விக்கூடங்கள் அமைக்கப்படவேண்டும் என்பது அவரது வேணவா. மீரா, ஆண்டாள் போன்ற பெண்கள் பக்தி நெறியில் திளைத்து, பேரின்ப நிலைக்கு இலக்கணமாக வாழ்ந்தார்கள். இத்தகைய பெண்கள் பிரம்மச்சாரிணிகளாக வாழ்ந்து பெண் கல்விக்கும், அவர்களின் மேம்பாட்டிற்கும் பாடுபடவேண்டும், ஜபம், தியானம், யோகப்பயிற்சி முதலியனவும் கல்வித்திட்டத்தில் முக்கிய இடத்தை வகிக்கவேண்டும் என்ற பல கருத்துக்கள் சுவாமியின் பேச்சுக்களில் பரவலாகக் காணப்படுகின்றன.

தாய்மொழிக்கல்வி சிறந்தது என்று சுவாமி விவேகானந்தர் கருதியபோதிலும் ஆங்கிலம், சமஸ்கிருதம், இலக்கணம், வேதநூல்கள் முதலிய வற்றிலும் பெண்கள் தேர்ச்சிபெற வேண்டும் என்று விரும்பினார். ஆண்களின் கல்விக்கும் துறவு வாழ்வுக்கும் அமைக்கப்படவிருந்த கல்விநிலையம் போலவே, கங்கையின் மறுகரையில் பெண்களுக்கும் மடம் அமைக்கப்பட வேண்டும், அதில் திருமணமாகாத இளம் பெண்களும், இளம் விதவைகளும், கல்விப்பயிற்சி பெறவேண்டும், தபஸ்வினிகளையும் இம்மடம் உருவாக்க வேண்டும் என்பதெல்லாம் அவர் நினைவுகளாக விளங்கின. சுவாமியின் சிந்தனைகளும் கனவுகளும் மிக விரிந்த இடைவெளிகளைக் கொண்டிருக்கவில்லை என்ற உண்மை உலகறிந்தது.

இந்தியாவில் நிலவிய வறுமைதான் கல்வியின் தாழ்ந்தநிலைக்குக் காரணம் என்று நம்பிய சுவாமிஜி, அதற்காக கிராமங்கள் தோறும் இலவச பாடசாலைகளை நிறுவவேண்டும் என்று விரும்பினார். பாடசாலைகளுக்குப் போவதற்கும் அவர்களது ஏழ்மை தடையாக நிற்குமானால், கல்வி அவர்களை தேடிச்செல்ல வழி கோலவேண்டும், நாட்டிலுள்ள தன்னலமற்ற சேவை செய்யும் சன்னியாசிகள் இத்தகைய சிறார்களின் வீடுகளுக்குச் சென்று ஆன்மீக நெறிகளைப் போதிக்க

வேண்டும். விஞ்ஞானம் போன்ற பாடங்களை கற்றுத்தரவும் இத்தகைய ஆசிரியர்கள் முன்வரவேண்டும். பிறநாடுகளைப்பற்றிய விடயங்களைச் சொல்வதன் மூலம் பூமிசாஸ்திரம், போன்றவையும் போதிக்கப்படவேண்டும் என்றெல்லாம் விரும்பிய தன்னலமற்ற இப்பெருந்தகை உருவாக்கிய திட்டம் மகத்தானது.

பாரத சமுதாயம் ஆன்மீகத்திற்கென்றே ஏற்பட்டது. நீறுபூத்த நெருப்பாக விளங்கும் அந்த ஆன்மீகத்தை, ஊதித் தீயாகக் கனன்றெழச் செய்யப் பொருட்பலம் வேண்டும். அடுத்ததாகச் சொந்த நலனைத் துறந்து, சமுதாய சேவை செய்பவர்களைத் திரட்ட வேண்டும். பிறருக்குச் சேவை செய்வதையே தங்கள் இலட்சியமாகக்கொண்டு கிராமம் கிராமமாகச் சென்று இவர்கள் கல்வியறிவைப் பரப்புவார்களேயானால் பொருளாதார மேம்பாடு, சீர்திருந்திய சமுதாயம் போன்றவை தானாகவே உருவாகும் என்பது சுவாமியின் கனவு.


அகக் கண்ணில் சுவாமி விவேகானந்தர் கண்ட சாதுப்படையினர் உலகெங்கிலுமுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடங்களின்மூலம் கல்விப்பணி, சமூகப்பணி, ஆத்மீகப்பணி என்பவற்றைத் திறம்பட நடாத்தி பயன்கருதாத தெய்வத்திருப்பணியாக உன்னத முறையில் செய்து வருகிறார்கள்.

அவர்கள் பணி மேலும் மேலும் வளரப் பிரார்த்திக்கின்றோம்.

*சிவமணி பரராசசிங்கம்*
இல 19, சின்சபா வீதி,
கொழும்பு 06.



Golap Sundari Devi, Popularly known as Golap - Ma, a woman disciple of the Master and a constant attendant of the Holy Mother.



Yogindra Mohini Biswas (Yogin-Ma). She also travelled with the Holy Mother during her extensive pilgrimage.

---

அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை
அவளன்றி பூர்புகு மாறறி யேனே.

திருமந்திரம்

# SILVER JUBILEE CELEBRATION
## 28 - 9 - 96
## PROGRAMME

- ☆ 5.00 p.m - Puja & Bhajan
- ☆ President's Speech
- ☆ Chief Guest's Speech
- ☆ Releasing of Souvenir
- ☆ Speech by the Guest Speaker<br>**Kampavarithi Thiru E. Jeyaraj**
- ☆ Musical Item - by Staff of the<br>Ramakrishna Mission<br>Sunday School
- ☆ Vote of Thanks
- ☆ Villupattu - by Sarada Kutir Residents
- ☆ Dance - by Arulmoli and Renuha<br>(Students of<br>Mrs. Thayanithi Mohan)

- Mangalam-

# வெள்ளி விழா

## ௨௮ - ௯ - ௯௬

## நிகழ்ச்சி நிரல்

☆ மாலை 5.00 மணி பூஜையும் பஜனையும்

☆ தலைவர் உரை

☆ பிரதம விருந்தினர் உரை

☆ வெள்ளி விழா மலர் வெளியீடல்

☆ பிரதம பேச்சாளரின் உரை
**கம்பவாரிதி திரு E. ஜெயராஜ் அவர்கள்**

☆ இசை நிகழ்ச்சி ~ ராமகிருஷ்ண மிஷன்
ஞாயிறு பாடசாலை
அங்கத்தவர்கள்

☆ நன்றியுரை

☆ வில்லுப்பாட்டு - சாரதா குடீர் மாதர்

☆ நடனம் - அருள்மொழி & றேணுகா
திருமதி தயாநிதி மோகன்
அவர்களின் மாணவிகள்

~மங்களம்~

# பெண்களும் ஆத்மீக வாழ்வும்

மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் தாம் பெற்ற இந்த மானிட உடலால் அடைய வேண்டிய பயன் என்ன, ஏனைய உயிரினங்களுக்கும் தமக்கும் என்ன வேறுபாடு, நல்லன இவை தீயன இவை எனப் பிரித்தறியும் பகுத்தறிவு பெற்றிருப்பதனால் நாம் அடையும் பேறு யாது? "அரிது அரிது மானிடராதல் அரிது" என்று ஒளவைப் பிராட்டியார் பாடியதன் தாற்பரியம் என்ன என்று சிந்திக்க வேண்டியவர்களாயுள்ளோம். தீயன இவை என அறியும் நாம் அவற்றை விலக்கி நல்லனவாய தெய்வப் பண்புகளை வளர்த்து நம்மிடத்துள்ள தெய்வத்துவத்தை அதிஷ்டித்து தெய்வீகநிலை அடைய முயற்சிக்க வேண்டும்.

இதற்காக ஒவ்வொரு மனிதனும் தனது சொந்த மதத்தைத் தெளிவுற விளங்கி, அறிந்து, உணர்ந்து, கடைப்பிடித்து, மனம் வாக்கு, காயங்களினால் சமய நெறி நின்றொழுகி, தெய்வீக வாழ்வுடையோராதல் வாழ்வின் குறிக்கோள் – இப்படியான தெய்வீக வாழ்வை ஆடவர் பெண்டிர் யாவருமே மேற்கொள்ள வேண்டும். கண்ணுக்குத் தோன்றும் வெளி உருவத்தில் ஆடவர் பெண்டிர் என்ற வேறுபாடு தோன்றினும், உள்ளிருந்து மனம், வாக்கு, காயத்தை இயக்குகின்ற தெய் வத்துவத்தில் எந்தவித வேறுபாடும் இல்லை. அந்த தெய்வ சக்தியின் வெளிப்பாடு வாழ்வில் தோன்றுமாயின் அதுவே ஆத்மீக வாழ்வு எனலாம்.

நால்வகை யோகத்தில் ஒன்றாகிய இராஜயோகத்தில் அட்டாங்க யோகத்தைப் பற்றிப் பேசப்படுகிறது. இதில் முதலாவதான இயமம், நியமம் இரண்டையும் நாம் பின்பற்றக் கடமைப் பட்டவர்கள். இயமத்தில் கூறப்பட்ட கொலை, களவு, மது அருந்துதல், பொய் பேசுதல், கொடையை ஏற்றுக் கொள்ளுதல், பிற உயிர்களுக்குத் தீங்கு செய்தல் ஆகிய தீய குணங்களை விலக்கியும் நியமத்தில் சொல்லப்பட்ட தூய்மை, மனநிறைவு, தவம், சாஸ்திரங்களைக் கற்றல், இரக்கமுடைமை, கடவுளிடம் பூரண சரணாகதி அடைதல் ஆகிய தெய்வ சம்பத்துக்களை கடைப்பிடித்தும் வாழ்வோமேயானால், நமது வாழ்வு புனிதமான ஒரு வாழ்வாகவே விளங்கும். மாசற்ற மனமுடையராதலே தெய்வீக வாழ்வுக்கு முதற்படி.

பெண்ணொருத்தி இல்லறக் கடமைகளுடன் சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருவாளேயானால், அவளை விடச் சிறந்த யோகி வேறிலர் எனலாம். இல்லத்தில் இருந்தவாறே உயர்ந்த ஆத்மீக வாழ்வு வாழும் ஒரு யோகியே அவள். "நடமாடும் கோயில் நம்பர்க்குச் செய்கின்ற சேவையே, படமாடும் கோயில் பரமற்குச் செய்யும் பூசை" என்ற பேரறிவு நம்மக்கள் உள்ளத்தில் வேரூன்ற வேண்டும். அதை உணர்ந்து, நமது சுகத்தைத் தியாகம் செய்து, நமது உடைமையை துன்புறுகின்ற மக்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான பேரன்பு நம்முள்ளத்தில் ஊறிப் பெருக வேண்டும். இந்த வகையிலே பெண்கள் சிந்தித்துத் தம்மைப் பக்குவப்படுத்தித், தம் குடும்பத்தினர், சூழ உள்ளவர்கள், – ஏன் – உயிர்க்குலம் அனைத்திலுமே உறைகின்ற இறைவனை உணர்ந்து, தரிசித்து அந்த இறைவனுக்குச் செய்யும் வழிபாடாகவே தாம் செய்யும் பணிகள் அனைத்தையும் செய்வார்களேயானால் அவர்களின் ஆத்மீக சக்தி போற்றுதலுக்குரியதாகும். இல்லற தர்மத்தின் வழி நின்றொழுகுவோரிடம் தெய்வீகப் பண்புகள் நிறைந்து விடுகின்றன. சாவித்திரி இல்லற தர்மத்தைக் கடைப்பிடித்ததால் ஆத்மீக சக்தி மிகுதியாகப் பெற்று யமதர்மனையே வென்று விடுகிறாள்.

இல்லத்தில் இருந்தவாறே சுயதர்மத்தைக் காத்துக் கொள்ளும் பண்பே ஆத்மீக சக்தியைக் கொடுத்து விடுகிறது. மஹா பாரதத்தில் பேசப்படும் ஒரு சம்பவம் இதற்கு ஒரு நல்ல உதாரணமாகிறது. பஞ்ச பாண்டவர் காட்டிலிருந்த போது அங்கே வந்த மார்க்கண்டேயர் தர்ம புத்திரருக்குக் கூறியதாக அமைந்த கதை இது. ப்ரம்மச்சரிய விரதத்தை மிக்க நியமத்துடன் காத்து வந்த கௌசிகன் என்ற பிராமணன் தனது தலைமீது எச்சமிட்ட கொக்கைப் பார்த்த மாத்திரத்திலேயே அது சாம்பலாய்ப் போனதைக் கண்டு தனது தபஸ்ஸினால் தான் பெற்றிருந்த சக்தியை எண்ணி அகந்தை மிகக் கொண்டான். தனது வேதபராயணத்தை முடித்துக் கொண்டு பிக்ஷைக்குச் சென்ற போது அங்கே ஒரு வீட்டில் பெண்ணொருத்தி தனது கணவனின் கடமைகளைக் கருத்தோடு செய்து கொண் டிருந்ததனால் பிராமணனைக் காத்திருக்க வைத்து விட்டாள். கடமையை முடித்துக் கொண்டு பிக்ஷையோடு வந்த போது பிராமணன் கோபித்துக் கொண்டதை அறிந்து அவனிடம் "தான் கொக்கல்ல" என்று கூறி, அவரது கோபம் கற்புடைய மகளிரை எதுவும் செய்ய முடியாதென்று அறிவுரை பகன்றாள். தான் கொக்கை எரித்த சம்பவத்தை அப்பெண் அறிந்து விட்டாளே என்றதை அறிந்து கௌசிகன், அகந்தையும் கோபமும் தணிந்து இல்லற தர்மத்தில் நின்றொழுகிய அப்பெண்ணின் தெய்வீக சக்தியை எண்ணி வியந்தான்.

இன்னும், இராமாயணத்தில் வசிட்டர் இராமனுக்கு நல்லுபதேசம் செய்த போது சூடாலை என்ற ஒரு பெண்ணின் வரலாறு கூறுகின்றார். சிகித்துவசன் என்ற அரசன் தனது மனைவி சூடாலையிடம் நாட்டை ஆளும் பொறுப்பை ஒப்படைத்துத் தவம் செய்வதற்காகக் காடேகினான். சூடாலை ஜனகமஹாராஜனைப் போலவே ஒரு சிறந்த கர்மயோகி, சிறந்த ஞானியுமாவாள். கணவன் காடேகித் தவம் செய்ய முயன்றும் மனபரிபாகம் அடைந்திலன் என்பதைத் தெரிந்து கொண்டாள். 'கடன்' என்ற பெயருடன் ஆடவன் உருத்தரித்து அவன் இருந்த இடம் சென்று புலன்களை அடக்கி, மனமொடுங்கி,

இறைசிந்தனை ஒன்றிலேயே நிலைகொண்டு தியானம் செய்யும் திறனை உபதேசித்துநாடு திரும்பினாள். சில காலத்தின் பின் 'மதனிகை' என்ற பெயர் தாங்கி அழகிய ஒரு பெண்ணுரு எடுத்துச் சென்று கணவனது மனப் பக்குவத்தைச் சோதித்தாள். அவன் பூரண மனபரிபாகம் அடைந்திருந்ததை அறிந்து மகிழ்ந்து சுய உருக்காட்டி இருவரும் நாடு திரும்பி, நீண்ட காலம் சிறந்த ஆட்சி செலுத்தினர் என்பதே அவ் வரலாறு. சூடாலை மிக உயர்ந்த தபஸ்வினியாக இருந்து கொண்டே சிறந்த முறையில் நாட்டை ஆண்டதோடு கணவனுக்கே உபதேசம் செய்து அவனை ஆத்மீக விழிப்படையச் செய்து நாட்டு மக்களுக்கும் நல்வழிகாட்டிய நிறைஞானியாக விளங்கினாள்.

வேத காலத்தில் வாழ்ந்த கார்க்கி, மைத்ரேயி போன்ற பெண்கள் அடைந்திருந்த ஞானப்பேற்றையிட்டு நாம் பெரிதும் பெருமைப்பட வேண்டியவர்கள். ஒரு சபையில் பல அறிஞர்கள் வீற்றிருந்து யாக்ஞவல்கியர் என்ற வேத விற்பன்னரிடம் பல வினாக்களைத் தொடுத்தனர். அவற்றுக்கெல்லாம் சரியான பதிலை யாக்ஞவல்கியர் கூறக்கேட்ட கார்க்கி தான் கேட்கும் வினாக்களுக்கும் அவர் சரியான விடை கொடுப்பாராயின் மட்டுமே அவர் வெற்றி பெற்றவர் எனக் கொள்ளப்படுவர் எனக் கூறி உயர்ந்த தத்துவ விளக்கம் பெற வேண்டிய வினாக்களைக் கேட்டுச் சரியான விடை பெற்றார் என்ற வரலாற்றிலிருந்து ஞானியர் சபையில் சரிநிகர் சமமாக இருந்து விவாதிக்கும் திறனுடைய பெண்கள் வேதகாலத்தில் வாழ்ந்தனர் என்று அறிய முடிகிறது. மைத்ரேயி என்ற மற்றொரு பெண் ஆத்மஞானத்தைக் கற்றுக் கொள்வதற்காக என்றே யாக்ஞவல்கியர் என்ற முனிவரை மணந்தாள். அவர் தனது பொருட்செல்வத்தை மனைவியர் இருவர்க்குமிடையில் பகிர்ந்தளிக்க விரும்பிய போது, ஆத்ம விடுதலைக்கு உதவாத அப்பொருள் தனக்கு வேண்டாமென அதை விலக்கி, ஆத்மஞானம் பெற்ற வரலாறு, வேதகாலப் பெண்கள் ஆத்மஞானம் பெறுவதிலும், ஆத்மீக விடுதலை அடைவதிலும் எவ்வளவு ஆர்வமும் ஈடுபாடும் உடையோராய் இருந்தனர் என்பதை அறியத்தருகிறது.

சங்கரர் காலத்தில் வாழ்ந்த மண்டனமிச்ரரின் மனைவி உபயபாரதி, அவர்களிருவருக்குமிடையே நடந்த விவாதத்தில் நடுவராய் இருந்து நடுநிலை வகித்து தனது கணவரே தோற்றார் என்ற சரியான தீர்ப்பை வழங்கினார். தோற்றால் துறவு மேற்கொள்வதாக ஒப்புக் கொண்ட மண்டன மிச்ரர் துறவு மேற்கொள்ளத் தயாரான போது தனது கணவரின் துறவுக்குத் தான் அனுமதி வழங்க வேண்டுமானால், தனது கேள்விகளுக்கும் சங்கரர் விடை கூற வேண்டுமென்றாள். இல்லறத்தில் அறிவற்ற சங்கரரோ உபயபாரதி இல்லறம் பற்றிய வினாக்களை எழுப்பிய போது பதில் கூற முடியாதவராய் அங்கிருந்து சென்று இல்லற அறிவு பெற்றுத் திரும்பி வந்து வெற்றி பெற்றார் என்பது வரலாறு. இதிலிருந்து பெண்கள் வேதவிற்பன்னராய் இருந்தது மட்டுமன்றி, புத்தி சாதுரியம் நிறைந்தவர்களாகவும், ஆத்மீக ஈடுபாடு மிக்கவர்களாகவும் விளங்கினர் என்பதை அறிகிறோம்.

இன்னும் எமது பெரிய புராணம், இல்லத்திலிருந்து கொண்டே முத்திப்பேறடைந்த பல பெண்களின் சரித்திரத்தைக் கூறுகிறது. காரைக்கால் அம்மையார் என்ற சிறப்புப் பெயர் பெற்ற புனிதவதியார் கணவன் அனுப்பிய மாங்கனிகளில் ஒன்றினை அடியாருக்கு உண்டியுடன் கொடுத்து உபசரித்தபின் கணவன் மாங்கனியைக் கேட்ட போது இறைவனிடம் பிரார்த்தித்து மாங்கனி பெற்றுக் கொடுத்தார். இதை அறிந்த அவருடையகணவர் மனையாளின் தெய்வத்துவத்தை அறிந்து அவருடன் வாழ விரும்பவில்லை. இதனால் அம்மையார் இறைவனிடம் பேயுருவம் வேண்டிப் பெற்று, உடலால் ஊர்ந்து சென்று கைலைக் காட்சி பெற்றார். அங்கே சிவப்பரம் பொருளிடம் இறவாத இன்ப அன்பு வேண்டினார். பிறவாமை வேண்டினார். மீண்டும் பிறப்புண்டேல் இறைவன் ஆடும் போது அவர் அடியின் கீழ் இருக்கும் பேற்றை வேண்டினார். அந்தத் தெய்வத் தாயின் உள்ளம் இறைவனோடு இரண்டறக் கலக்கின்ற அந்த முத்திப் பேறொன்றை மட்டுமே அவாவி நின்றமையின் அவர் ஆத்மீக பரிபக்குவத்தின் உச்சக்கட்டத்தை எட்டி நின்ற நிலையைப் பார்க்கிறோம். திலகவதி அம்மையாரின் தவம் சமணம் சார்ந்த அவரது தம்பி மருணீக்கியாரைச் சைவம் தழுவ வைத்து, சமயகுரவருள் ஒருவராக்கி, சைவத்துக்கு ஈடிணையற்ற பணியாற்றிய பெருங்குரவராய்ச் சிறக்க வைத்தது.

கண்ணனையே மணாளனாக வரித்து, அவன் அன்பில் ஊறித் திளைத்து, அடியார் உள்ளங்களுக்கு விருந்தாய் அமைந்த பல பாசுரங்களைப் பாடி, உலகை மறந்து கண்ணனுடன் இரண்டறக் கலந்த கோதை நாச்சியாருடைய வாழ்க்கை, அவருடைய ஆத்மீக விழிப்பின் திறனை வெளிப்படுத்துகிறது. இறைவனால் ஆட்கொள்ளப்பட்டமையால் ஆண்டாள் என்ற பெயரையும், மாலையை முதலில் தான் சூடிப் பின் இறைவனுக்குக் கொடுத்த காரணத்தால் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி என்ற பெயரையும் பெற்றார் அந்தத் தெய்வமாது. பக்தமீரா, கண்ணன் காதலில் தன்னை மறந்து, இராசபோக வாழ்வை உதறித் தள்ளிவிட்டு, கண்ணனுடன் இரண்டறக் கலத்தலே வாழ்வின் குறிக்கோள் என்பதை உணர்ந்து கண்ணனின் கீர்த்தியைப் பாடிப்பாடி அவனுடன் கலந்த வரலாறு அடியார் உள்ளங்களை உருக வைக்கும் தன்மையது.

அண்மைக் காலத்தில் வங்க மண்ணில் சர்வ சாதாரண, ஆனால் பண்பிலும், ஆத்மீகத்திலும் மிக உயர்ந்து விளங்கிய பிராமணக் குடும்பத்தில் பிறந்து, பள்ளிப் படிப்பே அறியாது வளர்ந்து, பெண்குலத்தைப் பெருநெறிப்படுத்தக் கூடிய உத்தம வாழ்வு வாழ்ந்த அன்னை சாரதை அடைந்திருந்த ஆத்மீக பரிபக்குவம் நமக்கெல்லாம் ஒரு சிறந்த முன் மாதிரி. அவர் பழமைக்கும் புதுமைக்கும் ஒரு பாலம். இல்லறத்தில் துறவறம் பேணிய தபஸ்வினி. இவர் சிறு பராயத்திலேயே குடும்பத்தினர், அயலவர், ஊரவர் யாவரிடமும் பேரன்பு

செலுத்தி உதவிகள் புரிந்து, அவர்கள் அன்புக்கும், மதிப்புக்கும் உரியவராகி வளர்ந்து வந்தார். ஐந்து வயதில் இருபத்துமூன்று வயது நிரம்பிய கதாதரரை மணந்த பின்பும் பெற்றோருடன் வாழ்ந்து அவர்களுக்கு உற்ற துணையாகி வீட்டு வேலைகளில் பங்கு கொண்டார். பள்ளிப்படிப்பே இல்லாதிருந்தாலும் அவரிடம் இயல்பாயமைந்திருந்த பொறுமை, பணிவு, அன்பு, சத்தியம் போன்ற நற்பண்புகளுடன் இறை பக்தியும் நிறைந்தவராக விளங்கினார். பதினான்கு வயது நிரம்பிய போது கணவன் இல்லத்தில் கணவனிடமே இல்லறக் கடமைகளைத் திறம்படச் செய்யும் முறையிலும், ஆத்மீகத் துறையிலும் பயிற்சி பெற்றார். பதினெட்டு வயதில் கணவனுக்குப் பைத்தியமென்று ஊரார் பேசிக்கொண்டதைக் கேட்டு மனைவியாகிய தனது கடமையை உணர்ந்து, அவர் இருப்பிடம் சென்றார். கணவன் கடவுள்மேற் கொண்ட பெருங்காதலால் ஆடிப் பாடித் திளைத்து உடல் உணர்வின்றிப் பைத்தியம் போல வாழ்ந்த நிலையைக் கண்டார். கணவனின் உண்மையான மனோநிலையைத் தெரிந்து கொண்டு, அவர் மேற்கொண்ட தூய துறவு வாழ்வுக்கு உற்ற துணையாய் அமைந்து வாழ்வதே தனது கடமை என்பதை உணர்ந்து தன்னை அவர் பணிக்கே அர்ப்பணித்து, தானும் தூய துறவு வாழ்வைக் கடைப்பிடித்து கன்னிமை கழியாது காலமெல்லாம் துறவியாகவே வாழ்ந்து கணவன்பணி செய்து இன்புற்றார். உயிர்க்குலமே அவரது குழந்தைகள். இல்லற தர்மத்தை முறை பிறழாது அனுஷ்டித்தமையும், தெய்வக் கணவனாரின் தர்ம போதனையும் சாரதையை நிறைநிலை பெற்ற, அன்பும் அறனும் தனது உடைமையாகக் கொண்ட ஒரு சிறந்த இல்லாள் என்ற நிலையை அடைய வைத்தது. மழித்தலும் நீட்டலும் இன்றி, உலகம் பழித்ததை ஒழித்து, மன்னுயிரோம்பி, அவர்க்கு அருள் செய்து, 'யான்' 'எனது' என்ற செருக்கறுத்து அவர் வாழ்ந்த வாழ்வு, 'ஒரு பூரண பக்குவம் பெற்ற துறவி' என்ற நிலைக்கு அவரை இட்டது. இந்த இருவகை அறவாழ்வும் தனித்தனி அவரிடம் முழுமை பெற்ற நிலையில் அவர் ஒரு தெய்வத் தாயாகி, அனைவராலும் போற்றி வழிபடப்பட்டு வருகிறார். பெரியோர், சிறியோர், அறிஞன், அறிவிலி, ஏழை, செல்வன், தமர், பிறர், உயர் குலத்தோன், தாழ் குலத்தோன் என்ற வேறுபாடு எதுவும் பாராமல் எல்லோரிடமும் சமத்துவமான அன்பு பாராட்டித் தன்னை அடைந்த அனைவரையுமே அணைத்துக்காத்த பெருஞ்சிறப்புடையாராவர். ஆத்மார்த்தமான அறிவுரைகள் பகர்ந்து விரும்பிய பக்தர் கூட்டத்துக்கு அவர்கள் தகுதி பாராமலே தீக்ஷை வழங்கினார். ஜபதபங்களைச் சரியானபடி சாதனை பண்ணாத தன்து சீடர்களுக்காகத் தானே இடையறாது பிரார்த்தனையில் ஈடுபட்டார். அப்பெருந்தகையாரது சிறப்பையோ ஆன்மீக நிலையின் முதிர்வையோ நாம் அறியும் தகுதி அற்றவர்கள்.

மேலே கூறப்பட்ட தெய்வீக வாழ்வு வாழ்ந்த பெண்கள் பலரும் இல்லற தர்மத்தைக் கடைப்பிடித்து, ஞானநிலை அடைந்து நடமாடும் சக்தி சொரூபங்களாக வாழ்ந்த பெண் தெய்வங்கள். இல்லறத்தில் புகுந்து கொள்ளாமலேயே துறவறம் மேற்கொண்டு பெருவாழ்வு வாழும் பேறு பெண்களுக்குப் பொருந்தாதா என்று சிந்திக்கின் அது முடியும். பெண்கள் வீடு துறந்து காடேகி தனித்திருந்து தவவாழ்வு மேற்கொள்ளப் புகின் ஆபத்துக்கள் பலவற்றை எதிர் நோக்க நேரிடும். எனவேதான் சுவாமி விவேகானந்தர் தவவாழ்வை மேற்கொள்ள விரும்பும் பெண்துறவியர்க்கென மடங்கள் தோன்ற வேண்டும் என்று பெரிதும் விரும்பினார். இப்படித் தோன்றுவதனால் பெண்குலம் இரண்டு விதமான பயனை அடைய முடியும். மடத்தில் சேர்ந்து துறவு வாழ்க்கையைக் கடைப்பிடிப்போர் தமது சொந்த ஆத்ம விடுதலை பெறுவர். ஏனைய பெண்களுக்கும் கல்வி, பண்பாடு, ஆத்மீக சாதனைகளில் பயிற்சி கொடுத்து சமுதாயத்தில் அவர்களுடைய மதிப்பும் பெருமையும் விளங்கவும் அவர்கள் ஆத்மீக விடுதலை பெறவும் உதவுவர்.

"பெண்களுக்கு மதிப்பும் பெருமையும் விளங்கும் இடத்திலேயே தெய்வ சாந்நித்தியம் நிலவும்" என்ற மனுவின் கூற்றுப்படி நாடும் மக்களும் தெய்வ சாந்நித்தியத்தோடு கூடிய வளம்பெற்ற இன்ப வாழ்வு வாழ வழி பிறக்கும். இதற்கென்றே சுவாமி விவேகானந்தரின் திட்டப்படி 1954ஆம் ஆண்டில் தக்ஷிணேஸ்வரத்தில் நிறுவப்பட்ட சாரதா மடமும் அதன் கிளை மடங்களும் அளப்பரும் சேவை செய்து வருகின்றன.

எனவே இல்லற வாழ்வை விலக்கி, புனிதமான தூய துறவு வாழ்வை மேற்கொள்ள விரும்பும் பெண்ணிநல்லார் தமக்கும் பிறர்க்கும் பயன்பட வாழ வேண்டுமாயின் இப்படியான மடங்களில் சேர்ந்து வாழ மன உறுதி கொள்வார்களாக. ஆனால் அவர்கள் துறவு வாழ்வை உள்ளமார விரும்புவோராகவும், தாம் மேற்கொண்ட வாழ்வில் பூரணமான மன உறுதியும், புலனடக்கமும், தியாக சிந்தையும், உயிரினத்தில் குறையாத அன்பும் உடையோராகவும் வாழவேண்டும்.

பெண்கள் பிறநாட்டு மக்களின் பண்பாட்டு மோகத்தை விடுத்து தமது சொந்தப் பண்பாட்டில் நிலைத்தவர்களாய் பெண்மையினின்றும் வழுவாமல் இல்லறமோ அன்றித் துறவறமோ மேற்கொண்டு ஆத்மீக வாழ்வு வாழ்ந்து நிறைநிலை அடைய முடியும். நடமாடும் பெண் தேவதைகளாகவே அவர்கள் மதிக்கப்படுவர். இதனால் நாடும் மக்களும் ஓர் உயர்ந்த இன்பம் நிறைந்த இக வாழ்வு அனுபவித்து பரமபதம் எய்தும் வாய்ப்பும் கிடைக்கப் பெறுவர்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வள்ளிநாயகி கணபதிப்பிள்ளை
செயலாளர்
ஸ்ரீராமகிருஷ்ண சாரதாசமிதி
'சாரதா குடீர்' 59, விவேகானந்தா வீதி, கொழும்பு 06.

*With The Best Compliments*

*from*

# Renuka

## GROUP OF COMPANIES

Manufactures Exporters Of
Sri Lanka Products.

P.O.Box 1403
69, Sri Jinaratna Road,
Colombo - 2
Sri Lanka
Cable : 'Rarenco'
Telex : 21324 Rarenco Ce
Phone : 422694, 436778, 436782, 435213
Fax : 94 -1 - 445549


*With Best Compliments from*

SSW


# S. S. WILSON & CO. (PVT) LTD.

IMPORTERS AND EXPORTERS

**No : 176,**
**4th Cross Street,**
**Colombo -11**
**T'Gram: Gratitude**
**T'Phone : 327662**



PRAVRAJIKA MUKTIPRANA



Pravrajika Bharatiprana(1959)

*With Best Compliments*

*From*

# *A*

# *Well Wisher*


உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப்புலனைந்துங் காளா மணிவிளக்கே — திருமந்திரம்

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சமிதி வெள்ளி விழாவினையொட்டி
அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற கவிதைப் போட்டியில்
முதல் இடம் பெற்ற கவிதை

**மேவியே ஒன்றாய் வாழ்ந்திடுவோம்**
***மேதினியில் நாம் உயர்த்திடுவோம்"***

வாழ்வதற்கே வாழ்க்கையென்று ~ இங்கே
வாழ்ந்தவர்கள் காட்டினார்கள்!
வாழ்க்கையது எதுவென்று ~ இங்கே
வரைமுறையை வகுத்தார்கள்.

கால் போன போக்கில் அல்ல ~ ~ ~ ~
கண் போன திசையில் அல்ல ~ ~ ~ ~
மனம் போன வழியில் அல்ல
மாண்பு நெறி காட்டுவதே வாழ்க்கை.

அன்னை சாரதா நடந்த பாதை
அழியாத சுவடுகளைக் கொண்ட பாதை
மேவியே ஒன்றாய் நடந்திடுவோம்
மேதினியில் நாம் உயர்ந்திடுவோம்.

குற்றம் காண்பதல்ல வாழ்க்கை என்று
குலவிளக்காய் நின்று ஒளிதந்த அன்னை வழியில்
மேவியே ஒன்றாய் வாழ்ந்திடுவோம்
மேதியினில் நாம் உயர்ந்திடுவோம்.

அன்புதான் வாழ்க்கை என்று
அவனிக்கு உரைத்த அன்னை
இல்லறத்தை நல்லறமாய் நடாத்தி
இகமதில் உயர்ந்த தெய்வம்.

உலகத்துப் பிள்ளை எல்லாம் "அம்மா" என்று
ஒற்றுமையாய் உரைத்து வாழ்ந்த வாழ்வின் வழியில்
மேவியே ஒன்றாய் வாழ்ந்திடுவோம்
மேதினியில் நாம் உயர்ந்திடுவோம்.

உலகியல் வாழ்வினிலும் உன்னதம் கண்ட அன்னை
உயிரினில் கலந்து வாழ்ந்த புனிதவாழ்வை ஒற்றி
மேவியே ஒன்றாய் வாழ்ந்திடுவோம்
மேதினியில் நாம் உயர்ந்திடுவோம்.

இறைநெறியில் இனிதே நின்று
இகமெலாம் சமூகப் பணிபுரிந்து
இப்படித்தான் வாழ்வதென்று பாதை சொன்ன
இராமகிருஷ்ணர் தேவி வழி நடப்போம்.

பதிதனையும் போற்றி பதி சார்ந்த தொண்டரையும்
பண்போடு மதித்துப் பணி செய்து
ஒற்றுமைக்கு வித்திட்ட சாரதாவின்
உயர்நெறி போற்றி உயர்வோம்.

அன்னை சொன்ன அன்பு வழியதனில்
ஆண்டவன் தொண்டு செய்து
மேவியே ஒன்றாய் வாழ்ந்திடுவோம்
மேதினியில் நாம் உயர்ந்திடுவோம்.

**செல்வி விஜயகுமாரி தங்கராஜா**

---

உள்ளம் பெருங் கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே — திருமந்திரம்

*With Best Compliments*

*from*

# Shanmuga
## Agencies

DEALERS IN ALL KINDS LOCAL PRODUCE
&
COMMISSION AGENTS

**45, 4th Cross Street,**
**Colombo - 11**
**T.P: 421943, 438467**

# பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் பாதையிலே

"இந்தியாவில் தோன்றிய தர்மமார்க்கங்கள் அனைத்தும் திரண்டு ஒரு வடிவாகியவரே ஸ்ரீ ராமகிருஷ்ணர்" என்ற கூற்று சுவாமி விவேகானந்தரால் அருளப்பட்டது. இதற்கமையப் பல்வேறு மத நெறிமுறைகளின் வழிநின்று சாதனையில் ஈடுபட்டு ஒரே பரம்பொருளை அடையும் பல்வேறு மார்க்கங்களே பல சமயங்களும் என்ற உண்மையை உணர்ந்தவர் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர். இவர் புகட்டிய பெருநெறிகள் என்றென்றும் போற்றத்தக்க சிறப்பு நெறிகளாகும்.

பரமஹம்சர் 1836ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ம் திகதி கமார்புகூரில் பிறந்தார். இவரது குழந்தைத் திருநாமம் கதாதரன் ஆகும். சிறுவயதிலேயே ஆழ்ந்த அறிவும், அற்புதமான நினைவாற்றலும், ஆரோக்கியமான தோற்றப்பொலிவும் உடையவராய் விளங்கினார். சிறு வயது முதற்கொண்டே புராண இதிகாசங்களைக் கற்பதிலும், இராமாயணம், மகாபாரதம், முதலிய நாடகங்களைப் பார்ப்பதிலும், நடித்தலிலும் ஆர்வம் காட்டினார். இவையாவும் தெய்வீக உணர்வுகளுக்கு அவரை ஆளாக்கின. பயமற்றவராக, தைரியசாலியாக இருந்தமை, பழகும் யாவரையும் தன்வசப்படுத்துவதாக அமைந்தன. சிறுவர் முதல் பெரியவர்கள் யாவரும் இவரோடு விரும்பிப் பழகினர்.

கதாதரனின் வாலிபப் பருவம் மிகவும் முக்கியம் வாய்ந்தது. இவரது பதினேழாவது வயதில் கல்கத்தாவிற்குப் போகும் சூழல் உருவாகிறது. இவரது அண்ணன் இராம்குமார் தான் ஆரம்பித்த சமஸ்கிருதப் பள்ளியில் தனக்கு உதவியாக இருக்கவும், மேற்கொண்டு படிக்கவும் இவரைக் கல்கத்தாவிற்கு அழைத்தார். கதாதரரோ வயிற்றுப் பிழைப்புக்கான படிப்பு வேண்டாம் எனவும், கடவுளைக் காணும் படிப்பே வேண்டும் எனவும் அடம்பிடித்தார்.

சிறிது காலத்தில் தக்ஷிணேஸ்வரத்தில் இராணி இராசமணியால் நிர்மாணிக்கப்பட்ட காளிகோயிலில் பூசாரியாகப் பணியாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். உடல், உலகம் யாவற்றையும் மறந்து காளிகோயில் பூசையைச் செய்யலானார். இதன் பயனாக எந்தக் காளிதேவியை விக்கிரகத்தில் வைத்துப் பூசித்தாரோ, அதே தேவியை நேரில் காணவேண்டும், அவளோடு பேசவேண்டும் என்ற ஆர்வம் மீதூரப் பெற்றார்.

சின்னஞ்சிறிய குழந்தை தன் தாயைக் காண எவ்வாறு அழுமோ அத்தகைய உணர்வோடு காளியைக் காணவேண்டும் என அழுதார். இதற்காக மணிக் கணக்காக தேவியின் சன்னிதியில் ஆடாமல் அசையாமல் கற்சிலையைப் போல் உட்கார்ந்து தியானிப்பார். தேவியை இன்னும் காணவில்லையே என ஏங்கி அழுவார். தேவியைக் காணாமல் உயிர் வாழ்வதில் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தவராகத் தன்னை மாய்க்க முற்பட்டவேளை காளிதேவியின் காட்சி கிடைத்தது. இக் காட்சி பற்றி அவர் "வேதனை அளவுகடந்து என் நிலையை இழக்கும் நேரத்தில், அன்னை ஈடு இணையற்ற அழகோடு ஒளி வடிவத்திலே காட்சி கொடுப்பதையும், பக்தர்களுக்கு அபயம் தந்து உற்சாகமூட்டுவதையும் கண்டேன்" எனப் பிற்காலத்தில் அவர் கூறியுள்ளமையிலிருந்து இவரது இறை அனுபவம் எத்தகையது என்பதை உணரக்கூடிய தாகவுள்ளது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பகவானின் சாதனைகள் பல. ஏழ்மை, வறுமை, பலவீனம், பயம் என்பன மனிதனே உருவாக்கியவை என்றும், அவற்றைத் துச்சமெனக் கருதி மனித சமூகம் நன்மைபெற உழைப்பதுவே ஒவ்வொரு இளைஞனின் கடமை எனவும், அவர் கருதினார். இவருடைய இந்தக் கருத்துக்கியையவே இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் பல படித்த சீட மணிகள், திரண்ட சங்கம் அமைந்தது. இதற்கு அடிநாதமாக விளங்கிய சுவாமி விவோகானந்தர் தொண்டும், துறவும் அச்சங்கத்தின் குறிக்கோளாயிருக்க வேண்டும் என விதித்து, இச் சங்கத்திற்குத் தமது சற்குருநாதனின் பெயரால் இராமகிருஷ்ண சங்கம் என்றே பெயரிட்டார். இச்சங்கத்தைச் சார்ந்த சாதுக்கள் "உயர்ந்த ஆத்மீக வாழ்வுக்கு, இறைமயமான உலகத்தை ஒதுக்காமல், உலகப்பற்றை ஒதுக்குதல் முற்றிலும் அவசியம்" என்ற உண்மையை உணர்ந்திருந்தனர்.

உள்ளக்கசிவு, அன்பு ஆர்வத்துடன் கடவுளைப் பிரார்த்திக்கும் போது அவரால் இதனைச் செவிமடுக்கிறார். கலியுகத்தில் பக்தியோகமே சிறந்தது. இறைநாமத்தை எந்நேரமும் சிந்தித்தலும், பாராயணம் பண்ணுதலும் அவசியம். இதனால் உடலும், உள்ளமும் தூய்மை அடையும். உடலிலுள்ள பாவம் இறை நாமத்தை ஓதுவதால் பறந்துவிடும்; மரமாகிய உடம்பிலுள்ள பறவையாகிய பாவங்கள், நாம் கைகளைத்தட்டி இறைநாமத்தைப் பாடும்போது, மரத்திலுள்ள பறவைகள் பறந்து விடுவதைப் போன்று அகன்று விடுகின்றன. நீர் நிலைகளில் உள்ள தண்ணீர் சூரியனால் ஆவியாக்கப்படுவது போல பாவங்கள் எல்லாம் இறை நாமத்தால் உறிஞ்சப்பட்டுவிடும். இவை யாவும் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறிய உயர்ந்த உப தேசங்களாகும்.

உலகவாழ்வில் ஈடுபடுவோர் அதிலேயே அமிழ்ந்து விடுதலே துன்பத்திற்கு காரணம். குடும்பம் மனைவி பிள்ளைகள் என்று எல்லோரும் அழுகிறார்கள். ஆண்டவனுக்காக யார் அழுகிறார்கள் எனக்

இடையிடையே இறைவனை நினைந்துருக வேண்டும். ஓய்வு நேரங்களில் இறைவனை நினைத்தல் நல்லது. மேலும் ஒவ்வொருவரும் இறை சிந்தனையுடன் இறைநாமத்தைப் பாராயணம் செய்து தத்தம் கடமைகளைச் செய்யலாம். 'நான்' 'எனது' என்ற முனைப்பின்றி, பயனில் பற்று வைக்காது கடமைகளைச் செய்பவன் பந்தபாசங்களில் இருந்து விடுபட்டுச் சிவசொரூபமாகின்றான்.

நீர்ப்பறவை கடலில் வாழ்ந்தாலும் நீரில் நனையாது இருப்பது போல, ஆமை நீரில் இருந்தாலும் கரையிலுள்ள முட்டைகள் மீது அதன் சிந்தனை இருப்பது போல, இல்லறவாழ்வில் ஈடுபட்டாலும் சிந்தனை இறைவனைச் சார்ந்திருக்க வேண்டும், என்கிறார். "கடமையை ஒரு கையால் செய்து மறுகையால் இறைவனைப் பற்றிக் கொள்ளுங்கள், கடமை முடிந்ததும் இருகைகளாலும் இறைவனைப் பற்றிக் கொள்ளுங்கள்" போன்ற உலக வாழ் விலுள்ளோருக்குக் கூறும் அருள்வாக்குகள் மிகவும் பயனுள்ளவை.

கடவுளே நிலையானவர், உலகிலுள்ள ஏனைய யாவும் நிலையற்றவை என்ற உண்மையை உணர்ந்து உண்மை வாழ்வு வாழ்ந்து காட்டியவர் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர். கருணை, இரக்கம், அன்பு என்பவற்றின் உறைவிடமானவர் அவர்.

மனிதன் ஒருவரையும் தூற்றாது, கெட்டவற்றைப் பார்க்காது, கெட்டவற்றை நினைத்துக் காலத்தை வீணாக்காது இருத்தல் வேண்டும். அதிலேயே ஆழ்ந்த ஆன்மீகம் நிறைந்துள்ளது, என்று அருளிய ஞானி 1886ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் பதினாறாம் திகதி இவ்வுலகை விட்டு நீத்தார். மகான் காட்டிய வழியில் நாம் வாழ்வோமாயின் இன்பம் பிறக்கும். ஆன்மீகம் தழைக்கும். அகிலம் மகிழும். அவர் காட்டிய வழியில் வாழ்ந்து அமைதி அடைவோமாக.

ஓ இராமகிருஷ்ணா! உமது வரலாறு இனிமையானது. உமது திருநாமம் இனிமையானது. உமது வடிவமும் இனிமையானதே! உமது அமுதமொழிகள் பாடல்கள் அனைத்தும் இனிமையானவையே! உம்மைப் பற்றிய எதுதான் இனிமையில்லை.

(ஓட்டூர் உண்ணி நம்பூதிரிபாட்)

எழுதியவர் - P. ஈஸ்வரி

(வெள்ளி விழாக்கட்டுரைப் போட்டியில் மேற்பிரிவு முதலாம் இடத்தைப் பெற்ற கட்டுரை)

# அன்னை சாரதா தேவியார் இல்லறத்தில் துறவறம் பேணிய பெருந்தகை

பூமியில் பிறக்கின்ற ஒவ்வொரு மானிடனின் இலட்சியமும் ஆன்மீக விடுதலையாகும். இந்த இலட்சியத்தை அடையும் நோக்குடன் மனிதன் இல்லறத்தையோ துறவறத்தையோ மேற்கொள்கின்றான். ஆன்ம ஈடேற்றத்துக்குரிய நெறி துறவறம் தான் என்னும் கருத்தை மாற்றி இல்லறத்தின் மூலமும் அந்நிலையை அடையலாம் என்னும் அரிய கருத்தை தனது வாழ்வினால் உலகிற்கு உணர்த்திய பெருந்தகை அன்னை சாரதா தேவி ஆவர்.

அன்னைக்குத் திருமணம் நடைபெற்றதோ குழந்தைப் பருவத்தில். அந்தப் பாலப் பருவத்திலே பச்சை உள்ளத்திலே ஏற்பட்ட அந்தப் புனிதமான உறவைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அழுத்தமான உண்மை ஒன்று உண்டு. அதாவது மன எழுச்சிகளின் தூண்டுதலால் வாழ்வதற்குத் துணை ஒன்று வேண்டும் என்ற சுய நல உந்துதலினாலோ, அல்லது எல்லோரும் வாழுகின்ற வாழ்க்கையை நாமும் வாழ்ந்து பார்ப்போம் என்னும் ஆசையினாலோ, ஏற்பட்டது அன்று இந்த உறவு. புலனுணர்ச்சிகளைக் கடந்து, சொந்தத் தேவைகளை மறந்து உடல் உணர்வுகளுக்கு அப்பாலே சென்று, ஆன்மாவை ஆன்மா நேசிக்கின்ற புனிதமான அன்பில் விளைந்த குழந்தை உறவு– தெய்வீகஉறவு – இது.

அன்பு என்னும் சொல்லின் ஆழத்தை நாம் அறிந்து கொண்டால் அன்னையின் இல்லற வாழ்வின் அர்த்தத்தையும் புரிந்து கொள்ள முடியும். அன்பு என்பது உள்ளத்தில் தோன்றுகின்ற ஓர் உணர்வு அல்ல. உணர்ச்சிகளும், எழுச்சிகளும், ஆசைகளுமே உள்ளத்தின் தோற்றங்கள். அன்பு என்பது ஆன்மாவின் செயற்பாடு. அன்னையிடம் நாம் காண்பதெல்லாம் ஆன்மாவின் அன்பு ஒன்றே தான். குருதேவர் அன்னையைப் பற்றிக் கூறும் பொழுது.,

"இறைவனின் தாய்மை என்னும் தத்துவத்தை உலகிற்குப் போதிக்க அவதரித்தவர்" என்று குறிப்பிடுகின்றார். இதனால்தான் இல்லறத்தில் ஈடுபட்டும் உடல், மனம் என்பவற்றைக் கடந்து தூய துறவியாக அன்னை வாழ்ந்தார். துறவறம் இரு தன்மைகளை உடையது. ஒன்று அனுபவிக்கக் கிடைக்காததனால் துறப்பது. அடுத்தது அனுபவிக்கும் வாய்ப்புக்கள் இருந்த போதும் உயர்ந்த ஒரு இலட்சித்துக்காகத் துறப்பது. இவற்றில் முதல் துறவு அவ்வளவு கடினமானதல்ல. இரண்டாவது கடினமானதும் அரியதானதுமாகும். மஹா பாரதத்திலே காந்தாரி அம்மையார், ஒளி மிகுந்த கண்கள் இரண்டிருந்தும் அவற்றைத் துணியாற் கட்டி வாழ்நாள் முழுவதும் இருண்ட வாழ்வு நடத்துகின்றார். அதனால் அந்தக் கண்களுக்கு ஏற்பட்ட மகத்தான சக்தியோ மரணத்தையும் வெல்லக் கூடியதாக இருந்தது. அன்னை சாரதா தேவியாரும், கணவன் உடனிருந்தும் உடலுணர்வுகளைக் கடந்து காமத்தின் சாயலே படியாத பூரண தூய துறவியாக வாழ்ந்ததால் மாபெரும் ஆத்மீக சக்தியைப் பெற்றார். திருமணமானவராக இருந்தும் குருதேவர் முழுமையான துறவியாக வாழ்வதற்கு துணை நின்ற பெருமை அன்னையாரையும் சாரும். எப்படிப்பட்ட தவவலிமையுடையோரையும் வசப்படுத்திக் கீழ் நிலைக்குக் கொண்டு செல்லக் கூடிய சக்தி ஒரு பெண்ணுக்கு உண்டு. ஆனால் பிரம்மத்தை அறிந்த ஒருவருக்கு ஆண், பெண் வேறுபாடு கிடையாது. ஆன்மாவை மட்டுமே அவரால் தரிசிக்க முடியும். இந்த நிலையில் தான், அன்னையார் இருந்தார். அதனால் தான் குருதேவர் சாதாரண துறவியைப் போன்று மனைவியை நிராகரிக்காமல் ஆறு மாத காலம் தன் அறையிலேயே தனக்குப் பக்கத்திலேயே உறங்குவதற்கு அனுமதி அளித்தார். கட்டிய கணவன் எந்த நேரம் சமாதி நிலை அடைவார் எந்த நேரம் விழிப்படைவார் என்பதை அவதானித்துக் கொண்டு ஒரு பெண் இரவு முழுவதும் கண் விழித்துப் பதிசேவை செய்வாளேயானால் அப்பெண் மகோன்னதமான துறவியை இவ்வுலகில் உருவாக்கித் தர முடியும். இத்தகைய சேவையைத் தான் அன்னையார் புரிந்தார். ஒரு முறை குருதேவர் அன்னையை நோக்கி "என்னை மாயையில் சிக்க வைக்கவா நீ இங்கு வந்தாய்?" என வினவிய பொழுது "அதற்காக நான் ஏன் வர வேண்டும், உங்கள் ஆத்மீக வாழ்க்கைக்கு துணை செய்யவே வந்திருக்கின்றேன்" என்ற தங்கு தடையின்றி தனது உள்ளத்தின் உண்மை நிலையை வெளிப்படுத்திப் பதில் கூறினார். அன்னையின் துறவின் மகிமை பற்றிக் குருதேவர் தன் சீடர்களிடம் கூறும் பொழுது "அவள் மட்டும் தூயவளாக இல்லாதிருந்தால் அவளுடைய தூண்டுதலால் நானும் புலனடக்கம் இழந்து நிலை தடுமாறியிருக்க மாட்டேன் என்று எப்படிக்கூற முடியும்"

என்று குறிப்பிடுகின்றார். இந்த ஒரு வார்த்தையே குரு தேவரின் தவ வாழ்வுக்கு அன்னையின் துறவு நிலை எந்தளவு பங்களித்திருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

மனைவியை வழிபட்ட கணவரை நாம் எங்கும் பார்த்ததில்லை. ஆனால் குருதேவர் தன் மனைவியைத் தேவியின் அவதாரங்களில் ஒன்றான ஷோடசியாக வழிபட்டார். பதினாறு வகையான உப சாரங்களைச் செய்து மந்திரங்களை உச்சரித்து பூசை செய்து அன்னையின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். அர்த்தராத்திரியில் தனியறையில் செய்யப்பட்ட இப்பூசை அவர்கள் இருவரின் துறவு நிலையின் உச்சக்கட்டமாகும். மனிதனிடமுள்ள அத்தனை மிருகத்தனத்தையும் எரித்துப் பொசுக்கிய வெற்றிப் பூசை இது. புனிதமான நினைவையும் உணர்வையும் மனைவியின் வடிவிற் கண்ட இவ்வெற்றிப் பூசையின் பொழுது, குருதேவர் வாழ்நாள் முழுவதும் தேடிய கடினமான ஆன்மீக சாதனைகளின் பலன்கள் அத்தனையையும் அன்னையாருக்கு அர்ப்பணம் செய்தார். இதனால் குருதேவரின் உயர்ந்த ஆன்மீக வாழ்விற்குப் பொருத்தமான துணையாகவும் ஈடிணையற்ற மனைவியாகவும் உயிர்க்குலத்துக்கு ஆன்மநெறி காட்டும் சற்குருவாகவும் அன்னை விளங்கினார்.

இல்லற வாழ்க்கையைப் பொறுத்த வரை அன்னையின் ஒவ்வொரு செயலும் அதி உன்னதமாகவே விளங்கியது. குருதேவரும் அன்னையும் ஒருவர் மீது ஒருவர் மிக ஆழமானதும் புனிதமானதுமான அன்பைச் சொரிந்தனர். கணவனைக் கடவுளாகவே மதித்து வாழ்ந்த அன்னை குருதேவருக்கு கால் பிடித்து விடுவது முதல் பாதகமலப் பூசை செய்வது வரையுள்ள அத்தனை சேவைகளையும் மனப் பூர்வமாகச் செய்தார். மாமியாருக்குச் சிறந்த பணியாளாக விளங்கினார். குருதேவருடைய சிஷ்யர்களுக்கும், அன்னையாரை நாடி வந்த பக்தர்களுக்கும் அடியார்க்கும் உணவு சமைத்துப் பரிமாறுவது, தங்குவதற்கு இடவசதி செய்து கொடுப்பது, நோயுற்ற போது பராமரிப்பது நல்லறிவு புகட்டுவது ஆகிய சகல கடமைகளையும் அன்போடு செய்தார். தனதும் கணவனதும் சுற்றத்தவர்களைப் பேணிப் பாதுகாத்ததுடன் அவர்களுடைய தேவைகளையும் குறைவின்றிப் பூர்த்தி செய்தார். மனிதர்களை மட்டுமன்றிச் சகல உயிரினங்களையும் நேசித்தார். இவ்வாறு சிறந்த இல்லத்தரசியாக வாழ்ந்த அன்னை துறவின் எல்லைக்கே எடுத்துக்காட்டாக விளங்கினார். அவர் இறைவனிடம் வேண்டிய தெல்லாம் களங்கமற்ற பளிங்கு போன்ற தூய்மையான மனமேயாகும். குடும்பச் செலவிற்கு வேண்டிய பணத்தைக் கூட சேமித்து வைத்து வாழாதவர் அன்னை. இதனால் விதவையாக கமார்ப்புகூரில் வாழ்ந்த போது சேர்த்துக் கொள்வதற்கு உப்புக் கூட இல்லாமல் வெறும் சோற்றையே மாதக் கணக்கில் உண்டு வாழ்ந்திருக்கிறார். "நாவை அடக்கினால் ஞானி ஆகலாம்" என்பதற்கிணங்க உணவின் சுவையைத் தேடாதவர் அன்னை. பஞ்சு மெத்தையில் அவருடைய படுக்கை அமையவில்லை. முரட்டுச் சாக்குப் பாயும் சொந்தக் கையாகிய தலையணையும் கொண்ட அவருடைய படுக்கை, துறவின் ஓர் அங்கமாகும். 'தீயோர் சேர்க்கை கூடாது' எனக் குருதேவர் கூறியும், நல்லோர் தீயோர் என்ற பாகுபாடு காணாது அனைவரையும் அணைத்த அன்னையின் மனோநிலை அன்னாரின் சமத்துவ நிலையை எடுத்து காட்டுகின்றது. பிறருடைய ஏச்சுக்களையும் தொல்லைகளையும் நச்சரிப்புக்களையும் தாங்கிப் பொறுமையோடு வாழ்ந்த அன்னையின் வாழ்வு எல்லைகடந்த சக்தி மிக்கதாயிற்று. அன்னையின் ஆன்மீக உயர்வு பற்றிக் கூற வந்த குருதேவர் "அவளிடம் இருக்கும் சக்தி சீறி எழுந்தால் பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவருமே வந்தாலும் உன்னைக் காப்பாற்ற முடியாது" என்று இருத●யனிடம் கூறுகின்றார். குருதேவர் தனக்கு மட்டும் சொந்தம் என்று அன்னை நினைக்கவில்லை. இதனால் கணவனுக்குத் தான் செய்ய வேண்டிய கடமைகளை பிற பெண்களும் செய்வதற்கு வாய்ப்பு அளித்தார். அதுமட்டுமன்றிச் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர், துன்புறுத்தப்பட்டோர் ஆகிய அனைவரிடமும் அன்னை கடவுளைக் கண்டதனால் பணிவும் அடக்கமும் நிறைந்த துறவியாக வாழ்ந்தார். தனது ஒப்பற்ற தெய்வீக வாழ்வு மூலம் வேதாந்த உண்மைகளை உலகிற்குப் போதித்த அன்னை தவம், செபம் முதலியவற்றிலும் முழுமையாக ஈடுபட்டார். ஓயாத வேலைகளுக்கிடையிலும் ஒரு நாளைக்கு ஓர் இலட்சம் முறையாவது இறை நாமத்தை உச்சரித்து வாழ்ந்த அன்னை இன்றைய இல்லறப் பெண்களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்குகிறார்.

இவ்வாறு, மகளாக, மனைவியாக, குருவாக, அன்னையாக எல்லாமாக வாழ்ந்த அன்னை சாரதா தேவியார், மேலான துறவியாகவும் வாழ்ந்தார். குருதேவரையும் அவரது துறவிச் சீடர்கள் எவரையும் விட, மேலாக சந்நியாச தர்மத்தின் நிறை நிலை பெற்று விளங்கினார். உலகத்தில் வாழ்ந்து கொண்டே உலகத்தைக் கடந்து நிற்கும் நிலையும் அன்னையிடம் மிகச் சிறப்பாக விளங்கியது. அன்னையார் எல்லா நாடுகளுக்கும் எல்லாக் காலங்களுக்கும் உரிய இலட்சியத் தாயின் சின்னமாகும். "யார் கடவுளுக்காக தன்னுடைய எல்லாவற்றையும் துறந்து விடுகின்றானோ அவன் நடமாடும் கடவுளேயாகும்" என்பது அன்னையின் முடிவான உபதேசமாகும். இவ்வாக்கியத்திற்கிணங்க "இக் கலியுகத்தில் கண்கண்ட கடவுளின் சக்தி அன்னை சாரதா தேவியார்" எனப் போற்றி அவர் தாள் பணிந்து அவர் வழி நிற்போமாக.

**பெயர் : பா. சுபாஜினி**

*With Best Compliments*

*from*

# Pattakannu Subbiah Achary & Sons

Jewellers - Estd. 1912
"Sovereign House"

**102, NEW CHETTY STREET,**
**COLOMBO -13, SRI LANKA .**
Cables: "Sovereigns", Colombo
Telephone :- 323818, 422304 & 423168
Telex :- 22235, 22236 Olbe ce
Fax : (941) 433780

*வெள்ளி விழாக்கட்டுரை போட்டியில் மத்திய பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றகட்டுரை*

# பெண்ணிற் பெருந்தகை அன்னை ஸ்ரீ சாரதா தேவி

அகிலாண்ட நாயகிக்காக அமைக்கப்பட்டிருந்த பீடத்தின் மீது வீற்றிருக்கும்படி ஸ்ரீ சாரதாதேவியை பரமஹம்ஸதேவர் வேண்டினார். மெய் மறந்து பரவச நிலையை எய்தியிருந்த அன்னையும் அதில் அமர்ந்தார். "பலஹாரிணி காளிகா" திருவிழாவில் அன்னை சாரதாதேவி அவர்களுக்கு ஏற்பட்ட இந்த அனுபவம் அவரது மகிமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. நாயகனும் நாயகியும் கடைப்பிடித்த பாரமார்த்திகப் பெருவாழ்வின் மேன்மைக்கு ஒரு விளக்கம். ஸ்ரீராமகிருஷ்ணர் பரமார்த்திக வாழ்வில் அடைந்த பெரு வெற்றிக்கு அவரது தவ வலிமையே காரணமென்று கூறுவதை விட உண்மையில் அவருடைய சம்பூர்ண சித்தியின் செம்பாகம் அன்னை சாரதாதேவியவர்களுக்கேயுரியது.

ஸ்ரீராமகிருஷ்ணரின் பார்வையில், சாரதா தேவியவர்கள் அன்னை பராசக்தியாகத் திகழ்ந்தார். அத்தகைய பராசக்தியிடம் தமது தபோ பலன்களையெல்லாம் அவர் பணிவுடன் சமர்ப்பிக்கின்றார். ஞானமும் பாரமார்த்திகப் பெரும்பேறும் அன்னை சாரதாதேவிக்கே உரியது. தவம் புரிந்தவர் இராமகிருஷ்ணர், அந்த தபோபலன்களை உலக நன்மையின் பொருட்டுத் தம் கைவசம் வைத்திருந்தவர் ஸ்ரீசாரதாதேவியார்.

அன்னை அருள் நிறைந்த ஞானத் தாய் எனும் உயர் நிலைக்கு உரியவரானார். மழலைச் சொல் கேட்டு இன்புற்று 'அம்மா' என்றழைக்கும் நிலையினை பெறா விட்டாலும், அருட் செல்வரும் செல்வியரும் 'தாயே' என்றழைக்கும் பேற்றினுக்குரியவரானார். பின்தங்கியதொரு கிராமத்தின் ஏழைப் பிராமண குடும்பத்தில் பிறந்து பள்ளி வாழ்வே யாதென்று தெரியாது வளர்ந்த ஸ்ரீ சாரதாதேவி உலக, மகான்கள் போற்றும் உத்தமியானார்.

'தேவரீர் தங்களுக்குக் திருத்தொண்டு புரிந்து பேரருளுக்குரியவராகி உய்தற் பொருட்டு நான் தங்களை வந்தடைந்தேனே யொழிய தங்களைப் பந்தத்தில் தள்ளுதற் பொருட்டன்று' என ஒரு சந்தர்ப்பத்தில் இராமகிருஷ்ணரிடம் அன்னை சாரதா தேவியவர்கள் கூறியிருந்தார். பர்த்தாவிற்கேற்ற பதிவிரதையானார்.

'தற்காத்துத் தற்கொண்டான் பேணி தகை சான்ற சொற்காத்து . . .' என வள்ளுவப் பெருந்தகை காட்டும் பெண்ணிற் பெருந்தகையானார்.

'ஜகன் மாதாவே ஒரு வடிவெடுத்து என்னை ஈன்று வளர்த்தாள்! இப்பொழுது மற்றொரு வடிவெடுத்து எனக்குக் குற்றேவல் புரிகின்றாள்' என இராமகிருஷ்ணர் அன்னையவர்களை தெய்வீகத் தன்மையுடையவராக காட்டி விடுகின்றார். கொழுநனைத் தொழுது எழுபவள் பெண்ணிற் பெருந்தகையன்றோ!

அன்னை அவர்கள் தனது இறுதி வாழ்நாட்களில் கடும் தவம் புரிந்தார். அவர் மேற் கொண்ட தவம் உலகத்தார்க்கன்றி தமக்குரியதாகக் கருதாத அன்னையவர்களின் தியாகசிந்தை பெண் குலத்திற்கே பெருமை கொடுத்துவிடுகின்றது.

பொறுமையின் இருப்பிடம் அன்னையவர்கள். பெற்றோரிடம் வாழ்ந்த காலத்தும், புக்ககம் புகுந்த காலத்தும், உலகப் பொது வாழ்விற்காக தன்னை அர்ப்பணித்த காலத்தும், பெண்ணிற்குரிய உயர் பண்புகளினின்றும் வழுவாது வாழ்ந்து வந்தவர்.

தனது கணவரின் போற்றுதலுக்குரியவர் அன்னையவர்கள். மாமியாரினதும் மற்றோரினதும் மதிப்புக்குரியவர். பெற்றவரின் பெருமைக்குரியவர். இன்று உலகமே போற்றும் உண்மைக்குரியவர். இல்லறத்தை நல்லறமாக்கும் பொருட்டு இளம் வயதிலேயே கதாதரருடன் கருத்தொருமித்து வாழ்ந்து பெண் குலத்திற்கே பெருமை தேடிக் கொடுத்தவர்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்புடையவர். பிறந்தகத்திலோ அல்லது புக்ககத்திலோ செல்வத்தின் சிறப்பில் வாழாவிடினும் தம் கைப்பட்ட பொருட்களில் மற்றோரும் இன்புற்று வாழ விரும்பியவர். இவ்வகையில் இராமகிருஷ்ணரைவிட சற்றே உயர்ந்து தோன்றியவர். அவர் விருந்தோம்பல் எனும் பண்பிற்கே இலக்கணமாக விளங்கியவர்.

*"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு"*

என உலகப் பொதுமறை தந்த வள்ளுவரின் வாய்மொழிக்கு ஒரு விளக்கமாகத் திகழ்ந்தவர்.

பெண் குலத்தின் பெருமைக்கும் அதன் தெய்வீகத் தன்மைக்கும் சிறப்பிலக்கணமாக விளங்கிய அன்னையவர்களை உலகமுள்ளவும் மறவாது. அவரது பெண்மையில் மனை மாட்சியும் தாய்மையும், துறவும் ஒன்று சேர்ந்து உச்சஸ்தானம் பெற்றுத் திகழ்வனவாயின. அவர் வாழ்வின் பெருமையிலே இந்த உலகம் என்றும் பெருமை கொண்டு விளங்கும் என்பது திண்ணம்.

பேயென்றும் மாயை யென்றும்
பெண்களை இகழ்ந்து பேசிப்
பெருந்துற வடைந்த பேரும்
பிழை புரிந்தவரே யன்றோ!
தாயென்றும் துணைவியென்றும்
தன்னுடைய நோக்கம் காக்கும்
சக தர்ம சக்தி யென்றும்
சாரதா தேவிதன்னை
நீ யென்றும் மகிழ்ந்து கொண்ட
நிர்மல வாழ்க்கை தன்னை
நினைத்திடும் தோறும் நெஞ்சம்
நெக்கு நெக்குருகும் ஐயா.

**சோ. ராகுலன்**

*With Best Compliments*

*from*



**V. Manickam & Bro**

24 Hour Service

No 34, 4th Cross Street,
Colombo -11,
TP: 323408, 323986.

*With Best Compliments*
*from*

# Lalitha

*Jewellery Mart Ltd.*

105,

Sea Street, Colombo -11.
Tel :- 323691, 431993 Fax: 436343
442, R.A.De Mel Mawatha, Colombo -3
Tel : 577451 - 2 Fax: 577454

*With Best Compliments from*

# OPATHA & CO.

**GENERAL MERCHANTS IMPORTERS & COMMISSION AGENTS**

***13 & 15, St. John's Road, Colombo -11.***
***T'grams: Opulence***
***T'phone : 325685***

*With Best Compliments*

*from*

# A

# Well Wisher

பிறருக்குக் கொடுப்பதனால் நீ உணவின்றி இறந்தால் அப்போதே நீ விடுதலை பெறுவாய்.

*With Best Compliments*

*from*

# New Regal PHARMACY

374, Galle Road, Wellawatta,
Colombo -6 T.P :- 582492

*With Best Compliments*

*from*

# Yoraka Engineering (Private) Limited

(Civil - Electro - Mech - Engineers)

No. 54, Hamers Avenue ,
Colombo -6,
Sri Lanka,
Tel : 588590 & 634705
Telefax : (941) 588590

# புலமைப் பரிசில்கள்

வசதியின்மை காரணமாக உயர் கல்வியை மேற்கொண்டு பயில்வதற்கு சந்தர்ப்பம் இல்லாத தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்.

குடும்பநிலை, பெற்றோர் வருமானம், மற்றும் அகதிநிலைக்கு உட்பட்டுள்ளவர்கள் என்ற அத்தாட்சிகளுடன் இந்து/கிறிஸ்தவ/கத்தோலிக்க குருமார் அல்லது சாரதா சமிதி போன்ற தர்மஸ்தாபனங்களின் அதிபர்களின் சிபாரிசுடன் உயர் கல்வியில் ஆர்வமுள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

**புலமைப்பரிசில்கள் பின்வரும் பாடநெறிகளுக்கு வழங்கப்படவுள்ளன.**

- ❑ Computer Diploma(3)
- ❑ Management Diploma(3)
- ❑ English Diploma (10)
- ❑ Montessori Teacher Training Diploma (3)

விண்ணப்பதாரர்களின் தரவுகள் யாவும் இரகசியமாகப் பேணப்படும்.

உங்கள் விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு விரைவில் அனுப்பிவைக்கவும்.


**திரு. B. Anandkumar**
கல்விப்பணிப்பாளர்
London Business School (Pvt) Ltd
3, St. Kilda's Lane,
Colombo 03.
Tel: 501978 Fax : 503575

*With Best Compliments*

*from*

☆
☆☆
☆☆☆
☆☆☆☆

# Ra-Gan Multi Enterprises (Pvt ) Limited

*Imports, Exports & Wholesale Electrical Dealers*
*All Kind Of Transport- 581696*

***152/8, Prince Street, Colombo - 11,***
***Tel : 421907, 347970, 446497, 440284 Fax : 94- 1- 347970***

# Ra - Gan Auto Link Communucation

* I.D.D. Call
* I.D.D. Fax
* Local Fax
* Local Call
* Connecting Call
* Laminating
* Typing (Computer, Electric)

**152/8, PRINCE STREET, COLOMBO -11**
**TEL : 421907, 348749, 347970,**
**FAX : 94 - 1 -347970**

*With Best Compliments*
*from*

# Reza Enterprise

548, Sri Sangaraja Mawatha
Colombo -10
Tele : 432932

*With Best Compliments from*

## Lakma

***Wire Nails & Barbed Wire Manufacturers***
***Lakma***

*With Best Compliments*
*from*

## Wickramasinghe & Co

**Horana**
**T.P : 034/ 61344**

*With Best Compliments from*

## J.T.N.

*(Fancy Goods)*

Dealers in Dancing Costum Jewellery
479 - A, GallE Road, Wellawatha, Colombo -6.

*With Best Compliments*

*from*

CHEAP

Stores

386, Galle Road,
Colombo - 6.
T.P 583978

*With Best Compliments*

*from*

# *A*

# *Well Wisher*

பல தடவை கேட்டும் தன்கையிலுள்ள பொருளை ஒருவருக்குக் கொடுக்காத குழந்தை மற்றொருவருக்கு கேட்ட உடனேயே கொடுத்துவிடும் அது போன்றதே கடவுள் அருள்.

–அன்னை ஸ்ரீ சாரதாதேவி

இரும்பு யுகமான கலியுகத்தில் உண்மையைக் கடைப்பிடிப்பவன் கடவுளை அடைவான்:-

–தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியார்

*With Best Compliments*
*from*

# Colonial Hardware Stores

**Importers & General Hardware Merchants**

**427, Old Moor Street, Colombo -12**
**Tele : 435414, 323167, Tele Fax : 431950**

*With Best Compliments from*

# Matco Enterprise

***General Hardware Merchant, & Importers***

**195, MESSENGER STREET, COLOMBO -12.**
**T.P: 448584, 423292, 072- 62559**

*With Best Compliments*
*from*

# VEMAAL CO. (PVT) LTD.

DEALERS IN COCONUT OIL ETC.

**1, Dam Street, Colombo -12 T.P 431641, 336565**

*With Best Compliments from*

# SUN BRAND CAMPHOR

***Manufactured by:***

**LANKA MOSQUITO COIL COMPANY (PRIVATE) LTD.**

**852/ 15 Aluthmawatha Road, Colombo - 15. Tel : 325529**

*With Best Compliments from*

# GAVICHEAMS

Dealers In : Aluminiumware, Plasticware, Glassware, Stationries & General Merchant,

**17/2, New Moor Street, Colombo -12,**
**Tel : 431818**

*With Best Compliments from*

# V.A.S.T.K.S. NADAR & CO.

**IMPORTERS & GENERAL MERCHANTS**

DEALERS IN : BOTTLES, CORKS, R.O.P.P CAPS, FOOD, COLOUR, ESSENCE, PERFUME, LABELS, SEALING WAX TALCUM POWDER, JOSS STICKS, PLASTIC LIDS ETC.

***41, 49/1, Dam Street, Colombo -12.***
***T.P : 336121, 433729, 436003.***

*With Best Compliments From*

✠

# LEAD TRAVELS & TOURS

**F- 73 Peoples Park Complex**
**Gasworks St, Colombo -11.**

*With Best Compliments*
*From*

# Mithpacks (Pvt) Ltd.

***No. 100, Maligakanda Road, Colombo -10, Sri Lanka.***
***Tel : 685706 Telex : 22307/8***
***Telefax : 546477***

*With Best Compliments From*

# Karuna Trading Company

***Importers Wholesalers and Retailers of Aluminium***
***Brass Copper, Eversilver, Enamel and Glassware***

29, DAM STREET, COLOMBO - 12, SRI LANKA. Phone : 447917 Grams : KARUNA

# *Well Wisher*

தன்னை யறிந்திடுத் தத்துவ ஞானிகள்
முன்னைவினையின் முடிச்சை யவிழ்ப்பார்கள்
பின்னைவினையைப் பிடித்துப் பிசைவார்கள்
சென்னியில் வைத்த சிவனருளாலே

–திருமந்திரம்

*With Best Compliments*

*From*

# AIRLINE TRADERS

**DEALERS IN BEARING OF ALL TYPES**

**52 Armour Street,**
**(Sri Sumanatissa Mawatha)**
**Colombo -12**

**496 Sri Sangaraja Mawatha,**
**Colombo - 12.**

**Tel : 447728, 335736, 072-75519 Fax : 447728**

*With Best Compliments*

*From*

☆

# VIDEO SAMUDRA

**88 F1/1 GALLE ROAD, DEHIWALA**

*With Best Compliments From*

# KVM AUDIO & VIDEO

RECORDING CENTRE

**370 -1/1 Galle Road, Colombo -6.**

**Tele : 595494**

*With Best Compliments*
*from*

*Mr. S. Ghaneshan*
**Vivian Traders**

396 B. GALLE ROAD, COLOMBO -6
TELE : 589124, 593626
(FREE DELIVERY SERVICE)

*With the Blessing of the Holy Mother*
*Sri Sarada Devi*

**Haran** Jewellery

50, KANNATHIDDY ROAD, JAFFNA.

*With Best Compliments*
*from*

**SAN REX**

***Importers Wholesale and Retail Dealers in T.V, Radios, Refrigerators, Glassware, Household Appliances and Gift Items ets.,***

310, Galle Road, Colombo - 6. Tel : 502349, 591507 Fax : 592039

*With Best Compliments*
*from*

©

***Geetha Communication***

391A, Galle Road,
Colombo -4.

PYETRON

*With Best Compliments from*

**Electronic & Electrical Items Repairs & Service Centre**
**Undertaken for repairs,**
**T.V. Video Cassette Decks, And All Home Electrical Itemes**

**And All Other House Hold Items, (Video Films)**
**Our Best Service For Your Satisfaction**
**Call For Your Service T.P : 07844832**

**572A, GALLE ROAD, WELLAWATTE.** (CLOSE TO CEYLON INN)

*With Best Compliments*
*from*

# B.K.S. Co, (Pvt) Ltd

**339, Main Street, Ambalangoda.**
**T.P : 58284**

*With Best Compliments*
*from*

# Jubilee Trading Company

410, Old Moor Street
Colombo -12
T.P:- 27641, 435230

*With Best Compliments*
*from*

# KALA TRADERS

151, Dam Street, Colombo -12.
T.P : 435284, 343218, 343219

*With Best Compliments*
*from*

# Ms. Sri Lanka Developments Ltd.

**201, Sri Sangaraja Mawatha, Colombo -10.**
**Tele : 432726, 337471, 337472**

*With Best Compliments*
*from*

# Uni Walkers Packaging Ltd.

114, Norris Cannal Road,
Colombo -8
Tele : - 685048 / 49 /50

28. மந்திரத்தைத் திரும்பத் திரும்பக் கூறுவதால் மனம் தூய்மை அடைகிறது. ஸ்ரீ சாரதாதேவியார்.

29. இளமையிலேயே இறைவனைத் தேடுபவன் பேறுபெற்றவன் (அன்னை)

30. மனமே எல்லாம் மனத் தூய்மையினாலன்றி ஒரு நன்மையும் விளையாது – ஸ்ரீ சாரதாதேவியார்.

31. நான் என்னும் எண்ணம் இருக்கும் வரை ஆசைகளும் இருந்தே தீரும் – ஸ்ரீ சாரதாதேவியார்.

32. மனிதனின் செயல்கள் மூலமே இறைவனின் விருப்பம் வெளியாகிறது. –ஸ்ரீ சாரதாதேவி.

33. கருணையும், இரக்கமும் இல்லாத ஒருவன் மனிதனே அல்ல. (அன்னை)

34. தூய மனமுடையவன் எல்லாவற்றையும் தூயதாகவே காண்பான். -(ஸ்ரீ சாரதாதேவி)

35. கலியுகத்தில் மனதால் செய்யும் பாவம் பாவமே அல்ல (அன்னை)

36. இறைவனை மட்டும் நேசிப்பவன் எவனோ அவன் புண்ணியவான் (அன்னை)

38. நம்பிக்கையும், உறுதியும் இருந்தால் எல்லாம் இருந்ததிற்கு சமம். (தூய அன்னை)

*With Best Compliments*

*From*

# R.B.W. INDUSTRIES (PVT) LTD.

(MANUFACTURERS OF OPTICA VIDEO CASSETTE)

நெருப்புண்டு நீருண்டு வாயுவும் உண்டங்
கருக்கனும் சோமனும் அங்கேஅமருந்
திருத்தக்க மாலும் திசைமுகன் தானும்
உருத்திர சோதியும் உள்ளத்துளாரே — திருமந்திரம்

***58, Vivekananda Road,***
***Colombo -6.***
***T.P 503185, 730757***
***Fax 733649***

*With Best Compliments*

*From*

# CHROMA INKS
# (PRIVATE) LTD.

***Office:***
***9. Athula Mawatha. Templar Road, Mount - Lavinia,***
***Tel : 713486, 724865***

***Factory :***
***103/2 Plliyandala Road, Katuwawala, Boralesgamuwa.***
***Tel: 518092, 518718, Fax : 518723***

*The two great movers of the human mind are the desire for the good and the fear of evil*
*Johnson, Samuel*

*With Best Compliments*

*From*

☆

☆

☆☆☆

# Jupiter Trading Co., Ltd.

( FOR PAPER & BOARD AROUND THE WORLD)

32 A. K Cyril C Perera Mawatha,
Colombo -13.
Tel : 323670, 343903, 433943
Fax : 430697

*He whose mind and speech are well controlled and pure will obtain the fruit of Vedanta Manu*

*With Best Compliments*

*From*

# *Five Star*

INTERNATIONAL (PVT) LTD.

***Meda - Welikada Road,***
***Rajagiriya,***
***Sri Lanka.***

***Tel : 864935 - International ( + 94 1) 864935***
***Fax : 864935 - International ( + 94 1) 864935***

*With Best Compliments*

*From*

32 Years Service To Printing Industry

**Sappi fine papers**

**Dupont Films/ Plates/ Chemicals**

IBF Films & Chemicals

**PRISM PRINTING INKS**

***Largest Ink Makers***

Leading Suppliers of Graphic Arts Products

# GENERAL INKS LIMITED

71 MESSENGER STREET, COLOMBO -12. POB 1449 COLOMBO.
FAX : 431495 TEL: 328765/ 343221/ 325198/ 341134

*What makes you happy in old age, do it when you are young. What makes you happy in the next world do it now when you are living here*

*Mahabharatha*

*With Best Compliments*

*From*

# A
# Well Wisher

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனு மாமே. – திருமந்திரம்

## இதயம் கனிந்த நன்றிகள்

- இம்மலருக்கு வாழ்த்துரை வழங்கிய மேன்மக்கள்
- விடயதானம் தந்துதவிய அறிஞர்கள்
- விளம்பரங்கள் அளித்த வியாபார நிறுவனங்கள்
- இம்மலரை வெளியிடுவதற்கு அனுபவரீதியான அறிவுரைகளை வழங்கிய திரு. சோமகாந்தன் அவர்கள்
- மலரை உரிய நேரத்தில் அழகாக வெளியிட உதவிய செவ்வந்தி அச்சகத்தார்.

***அனைவர்க்கும் எமது நன்றிகள், வாழ்த்துக்கள்***

*With Best Compliments*

*from*

# Asbestos
## Cement Industries Ltd.

Office:
175, Sri Sumanatissa Mawatha,
Colombo -12.
Tel : 435115, 437414 & 448145

Factory :
Off Attidiya Road
Ratmalana
Tel : 714511 - 2.

*With Best Compliments*

*from*

**Mascons Ltd**